747

பொன்னி

PONNI 25-11-51

747
4.57



197803

சிறந்த கதை விருந்து

சிறு கதைகள்

தாஜ்மஹால் ...	நா. பாண்டுரங்கன் ...	0— 8—0
வீடும் விளக்கும் ...	சுகி ...	0— 8—0
நினைவுச் சின்னம் ...	இளமைப்பித்தன் ...	1— 0—0
கடல் முத்து ...	எஸ். ஆறுமுகம் ...	1— 0—0
அமிர்தம் ...	,, ...	1— 0—0
உலக அரங்கில் ...	டி. கே. சீனிவாசன் ...	1— 0—0
இன்பக் கனவு ...	இராதாமணாளன் ...	0—12—0

நாவல்கள்

அழகு நிலா ...	ரா. தணலன் ...	1— 0—0
முகராத முல்லை ...	ஸி. ஆர். நரசிம்மராஜ் ...	2— 0—0
இன்ப இரவு ...	ராஜகுமாரி ...	0— 8—0
இன்ப லாகிரி ...	ஸ்ரீராம் ...	0— 8—0
இதயக் குமுறல் ...	எஸ். சதாசிவம் ...	1— 8—0
லட்சியப் பாதை ...	க. நாராயணன் ...	2— 0—0

ரூபாய் 5-க்குக் குறைந்து வி. பி. பி. அனுப்பப்படமாட்டாது.
முன்பணம் அனுப்புவோருக்கு மட்டுமே தபாற் செலவு இலவசம்.

பொன்னி லிமிடெட் :: சென்னை - 21

பொன்னி
பொருளடக்கம்

மலர் 5 | நவம்பர் 25, 1951 | இதழ் 18

திருவள்ளுவர் ஆண்டு 1982 கார்த்திகைத் திங்கள் 9-ம் நாள்

போராட்டம்	ஆர். கே, சண்முகம்	1
பூனைக்கு ஒரு காலம் ...	கார்ட்டூன்	2
தமிழ் மக்களுக்கு அழைப்பு ...	தலையங்கம்	3
காலமும் கருத்தும்		5
தமிழ் விருந்து ...	தமிழ்த்தும்பி	7
வீணை நாடகம் ...	சகுணபாய் மான்சிங்	12
பாதுஷாவின் காதல்	இளமைப்பித்தன்	17
பாரதி மீண்டும் வந்தால் ! ...	வீர. மெய்யப்பன்	29
புரியாத புதிர் ...	சுலோசனா	30
நமக்குள்ளே	சுகி	34
புயலுக்கு பின் ...	'தில்லைவாசி'	41
ராஜா ராணி	தங்கமணி	46
ஆடும் மாடும்	டி. கே. சீனிவாசன்	51
பொழுது போக்கு ...	பூபாலன்	61
வளரும் இலக்கியம்	பூவை	62

... DEC 1951

போராட்டம்

பிராணிகள் வர்க்கத்திலும் சரி, மனித இனத்திலும் சரி, குறிக்கோள் காரணமாகப் போராட்டங்கள் நடந்து வருகின்றன. சில சமயங்களில் மனிதனுடைய போராட்டங்களைக் காட்டிலும் மிருகவர்க்கத்தின் போராட்டங்கள் கௌரவமாக இருக்கின்றன என்றுகூட நினைக்கும்படியாக இருக்கிறது. மனிதன் உயிர் வாழத் தனது சகோதரனைக் கொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் பரந்த உலகத்தில் மனிதன் சந்தோஷமாக வாழ இயற்கை வசதிகள் ஏராளமாக இருக்கின்றன. மிகவும் வருத்தப்படக் கூடிய விஷயம் என்னவென்றால், மனிதர்களுக்குள் அறிவும் படிப்பும் இருந்தும்கூட லட்சியப் போராட்டங்கள் நடைபெற்று வருவதேயாகும்!

[கோவை சர்க்கார் கல்லூரியில் பேசியபோது திரு. ஆர். கே. சண்முகம் இவ்வாறு குறிப்பிட்டார்.]

பூனைக்கு ஒரு காலம்!

197803
சென்னை-600 008

தமிழ் மக்களுக்கு அழைப்பு

இந்தியத் துணைக் கண்டத்தில் வரப்போகும் இரண்டு மூன்று மாதங்களில் மாபெரும் பொதுத் தேர்தல் நிகழவிருக்கிறது. உலகிலேயே இதுவரை கண்டிராத புதுமை என்று கூறத்தக்க வகையில் பதினெட்டுக் கோடி வாக்காளர்கள் இத்தேர்தலில் தங்கள் வாக்குகளைப் பதிவுசெய்ய இருக்கிறார்கள். நாலாயிரத்திற்கு மேற்பட்ட அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு இவர்களைச் சேர்ந்திருக்கிறது!

இந்தப் பொறுப்பின் ஒரு பகுதி தமிழ் மக்களையும் சார்ந்திருக்கிறது. டில்லி மக்கள் சபைக்கும், சென்னை சட்டசபைக்குமாக இருநூறுக்கு அதிகமான அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டம் தமிழ்நாட்டில் இன்னும் ஒரு மாதத்தில் வந்துவிடப்போகிறது. பல கட்சிகளின் சார்பிலும், தனிப்பட்ட முறையிலும் போட்டியிடும் ஆயிரக்கணக்கான அபேட்சகர்கள் தங்கள் அபேட்சைப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் சடங்கு நடந்து முடிந்துவிட்டது. ஒரு தொகுதிக்கு மூன்று பேர், நான்கு பேர் போட்டிக்குக் குறையாமல் இருபத்தைந்து பேர்வரை நிற்கின்றனர். டிசம்பர் முதல் நாளன்று அபேட்சைப் பத்திரங்களைத் திரும்பப் பெற்றவர்கள் தவிர மற்றவர்கள் யார் யாரென்பதும் களத்தின் போர் நிலையும் கட்சிகளின் பலமும் புரிந்துவிடும். காங்கிரஸ், சோஷலிஸ்டு, கம்யூனிஸ்ட், பிரஜாக்கட்சிகளே குறிப்பிடத்தக்க அளவுக்குப் போட்டியிடுகின்றன. மற்ற சில்லறைக்கட்சிகள் சில மாவட்டங்களிலும், சில தொகுதிகளிலுமே போட்டியிடுகின்றன. பாதிக்கு மேற்பட்ட அபேட்சகர்கள் எக்கட்சியிலும் சேராத 'சுயேச்சை'வாதிகளே!

வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை என்பது நம் நாட்டில் புது நடைமுறை. எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் பெரும்பான்மையினராக உள்ள நம் நாட்டில் இந்த வாக்குரிமை சரிவரப் பயன்படுமா என்பது கேள்விக்குரிய செய்தியாகும் ஆட்சியிலிருப்பவர்களைப் பற்றியே கவலையில்லாத மக்கள் இங்கு

அதிகம். ஆட்சிமுறை தரும் தொல்லைகளைப் 'பொறுமை'யுடன் ஏற்போரும் இங்கு அதிகம். 'யார் ஆண்டாலென்ன?' என்று தட்டிக்கழிக்கும் இயல்பு இங்கே பலரிடம் குடிகொண்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. அயலவர் ஆட்சியில் நெடுங்காலம் உழன்று உரிமையுணர்வே அற்றுவிட்ட சமுதாயமாக நம் தாயகம் விளங்குகிறது. இந்நிலையில் வாக்குரிமையின் பெருமையை உணர்வதும், அதைத் தக்கவாறு பயன்படுத்த வேண்டுமென்ற அருமையைப் புரிந்துகொள்வதும் பெரும்பாலான சாதாரண மக்களுக்கு எளிதல்ல. இமாசலப் பிரதேசத்தில் நூற்றுக்குப் பதினைந்து பேரே வாக்களித்தனர் என்று வந்த செய்தி இந்த உண்மையையே வலியுறுத்துகிறது. பிரிட்டனில் நூற்றுக்கு எண்பத்தைந்து பேர் தங்கள் வாக்குகளை அண்மையில் அங்கே நடந்த பொதுத் தேர்தலில் பதிவுசெய்தார்கள் என்னும் சேதியை இத்துடன் ஒத்து நோக்கினுல் நம் நிலை எவ்வளவு தாழ்ந்திருக்கிறது என்பது நன்கு புரியும்.

வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை வழங்கியும் நூற்றுக்குப் பதினைந்து பேரே 'ஓட்டு'ப் போட்டார்கள் என்று முடிவதைவிடப் பழைய வாக்காளர் ஜாபிதாப்படி தேர்தல் நடப்பதே மேல்! தெரிந்தோ தெரியாமலோ இந்திய அரசியல் திட்டம் இந்த வாக்குரிமையை வழங்கிவிட்டது. பயன்படுத்திக்கொள்ள வேண்டிய பொறுப்பு நாட்டு மக்களைச் சார்ந்திருக்கிறதென்பதைக் கூற வேண்டியதில்லை. எண்ணற்ற அபேட்சகர்கள் போட்டியிடுவதாலும் கட்சிகளின் தேர்தல் முழக்கத்தாலும் வாக்காளர்களிடையே 'விழிப்பை' ஏற்படுத்திவிடலாமென்றாலும், பெரிய முயற்சி இவ்வகையில் தொடங்கவேண்டுமென்பதே நம் கருத்தாகும். அரசாங்கம் தன்னுடைய வசதிகளையெல்லாம் பயன்படுத்தி வாக்காளர்களை 'ஓட்டுச்சாவடி'ப் பக்கம் கவனம் காட்டச்செய்வது மிக அவசியமாகும். வாக்குரிமையை வழங்கும் விதம்பற்றி நாடெங்கும் மூலைமுடுக்குகளில் கூடச் சரியான பிரசாரம் நடைபெற்றாக வேண்டும். மக்களின் நல்வாழ்வில் கருத்துள்ள எக்கட்சியும் இம்மாறுதலை விரும்பும், ஆவனசெய்யும் என்றே கூறலாம்.

எனவே, தமிழ்மக்கள் முன்புள்ள பிரச்னை 'யாருக்கு உங்கள் வாக்கு?' என்ற பெருங்கேள்வி ஆயினும், 'எல்லோரும் வாக்குரிமையைப் பயன்படுத்துவோம்' என்பதே முதல் முழக்கமாக இருக்கவேண்டும். இம்முழக்கம் தமிழகமெங்கும் தொடர்ந்து ஒலிக்கவேண்டும். அந்தப் பேரொலி தமிழ்மக்களை 'உங்கள் வாக்குகளைத் தக்காருக்கு வழங்க எழுக' என அழைப்பதாய் அமையவேண்டும்!

காலமும் கருத்தும்

வாழ்த்துகிறோம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பல்கலைக் கழகமாகக் கருதப்படுகிற காரணத்தால் அங்கே நிகழும் பதவி மாறுதல்கள் தமிழ்மக்களின் கவனத்தைக் கவர்வது இயற்கையே. பொருளாதாரத் துறையில் பெரிய மேதையாக விளங்கும் திரு ஆர். கே. சண்முகம் அவர்கள் அப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமனம் பெற்றிருப்பது மகிழ்ந்து வரவேற்கத் தக்க செய்தியேயாம். தம் பதவிக் காலம் முடிந்து விலகும் டாக்டர் மணவாள ராமாநுஜம் அவர்கள் குறிப்பிடத்தக்க பணி புரிந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சிறப்பை உயர்த்தியிருக்கிறார். மாணவர்களிடையே கட்டுப்பாட்டை நிறுவுவதில் அவர் மேற்கொண்ட முயற்சிகளையும் அடைந்த வெற்றியையும் யாரும் மறந்துவிட முடியாது. அவரை அடுத்துத் துணை வேந்தராகப் பொறுப்பேற்றுள்ள சண்முகம் அவர்களின் சிறப்பு நலன்களைப்பற்றிக் கூற வேண்டியதில்லை. தமிழ்ப் பல்கலைக் கழகம் பல பெரும் நற்பணிகளைச் செய்து முடிக்கும் வகையில் அன்னார் திட்டங்களை வகுப்பாரென நம்புகிறோம்.

மழை பெய்தது

'மழை பெய்தது' என்பது நமக்கு ஆச்சரியப்படத்தக்க செய்தியாக மாறும் அளவுக்குக் கடந்த சில ஆண்டுகளாக வானம் நம்மை ஏமாற்றி வருகிறது. வானத்தை நம்பியிருக்கும் பயிர்கள் மழையின்மையால் ஏமாந்து வருகின்றன. உணவுப் பொருள்களுக்குப் பயிர்களை நம்பியிருக்கும் நாம் விளையாத கழனிகளைக் கண்டு ஏமாந்து வருகிறோம். இந்தச் 'சோக'க் கதைக்கு முற்றுப்புள்ளிவைக்க எத்தனையோ வழியுண்டு – எனினும் வானத்தையே நம்பியிருக்கின்றனர் அரசினர்! அவர்கள் மனங் குளிர, காய்ந்த நிலங் குளிர, தமிழகமெங்கும் நல்ல மழை கடந்த வாரத்தில் பெய்திருக்கிறது. சென்னையிலும் மழை பரவலாக இருந்தது; இன்னும் மழை பெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இம்மழையின் பயனாகச் சென்னை நகருக்கு உடனடியாக நேரவிருந்த தண்ணீர்க் கஷ்டம் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. ஆறு மாதம் வரை தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படாமல் தவிர்க்கலாம் என்றும் கூறப்படுகிறது. சென்னைக்குத் தண்ணீர்க் கஷ்டம் தீர்ந்தது போல, உணவுப் பொருள் வளமும் தமிழ்நாடெங்கும் பெருக

இம்மழை உதவியாயிருக்குமென்றும் தீராத அரிசி நெருக்கடி விரைவில் தீருமென்றும் எதிர் பார்ப்போமாக.

சமாதானம்

பாரிஸில் ஐ. நா. சபை கூடியிருக்கிறது. உலக சமாதானம் நிலவ மேற்கத்திய நாடுகள் ஒரு திட்டத்தையும் ரஷ்யா ஒரு திட்டத்தையும் சபையின் பரிசீலனைக்குக் கொண்டுவந்திருக்கின்றன. இந்தியா இந்த இரண்டு திட்டத்தையும் இணைக்கும் மத்தியஸ்த வேலையை ஏற்கும் என்றும் கூறப்படுகிறது. ரஷ்யத் திட்டம் மேற்கு வல்லரசுகளால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அமெரிக்கரின் திட்டத்தை ரஷ்யா சில திருத்தங்களோடு ஏற்கத் தயாராயிருப்பதாக, தோழர் விஷின்ஸ்கி, ஐ. நா. சபையில் பேசியிருக்கிறார் அவருடைய பேச்சை இந்தியா முதலிய சில நாடுகள் வரவேற்றிருக்கின்றன. வழக்கம் போல அமெரிக்காவும் பிரிட்டனும் சந்தேகக் கண்கொண்டு நோக்கியிருக்கின்றன. இந்நிலையில் உலக சமாதானம் உறுதியாவதற்கு வல்லரசுகள் ஆயுதக் குறைப்பை மேற்கொள்ள வேண்டுமென்ற திட்டம் நிறைவேறுவது கடினமே. ரஷ்யாவும், அமெரிக்காவும் தங்கள் தங்கள் 'சமாதான ஆர்வத்தை' உலகிற்குப் புலப்படுத்த மட்டுமே இந்தப் பரிசீலனை பயன்படும்! வேறு உருப்படியான நன்மைகளை எதிர் பார்க்க முடியாது.

சர்க்கார் ஊழியர்கள்

சர்க்கார் ஊழியர்களின் மாநாடு ஒன்று அண்மையில் டாக்டர் லட்சுமணசாமி அவர்களின் தலைமையில் நிகழ்ந்தபோது, அவர்களின் குறைகளைப்பற்றி எடுத்துரைக்கப்பட்டது. முக்கியமான குறை விலைவாசி உயர்வுக்கேற்பக் கிராக்கிப்படி உயர்வு தரப்படவில்லை என்பதே. மத்திய சர்க்காரும் மற்ற ராஜ்ய சர்க்கார்களும் கிராக்கிப்படி உயர்வைத் தத்தம் ஊழியர்களுக்கு நல்கியிருக்கும்போது சென்னையும் ஏன் அவ்வழியைப் பின்பற்றக் கூடாது என்பதே அவர்கள் கேள்வி. இக்கேள்விக்குத் தக்க விடையளித்துத் தம் ஊழியர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவேண்டியது சென்னை சர்க்காரின் பொறுப்பு என்று எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

சென்னை மாநாடு

சென்னையில் டிசம்பர் 13, 14, 15, 16 தேதிகளில் தி. மு. கழகத்தின் மாநில மாநாடு சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. மாநாட்டுத் தலைவராக அறிஞர் அண்ணாத்துரையும், திறப்பாளராகத் தோழர் கே. கே. நீலமேகமும் மதுரைப் பொதுக்குழுக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். முக்கிய நேரத்தில் கூடும் சென்னை மாநாடு தமிழ்மக்களின் நல்வாழ்வுக்கு நல்லதொரு திட்டம் தருமென்று நம்புகிறோம்.

தமிழ் விருந்து

தமிழ்த்தும்பி

11. கனவும் நனவும்

அகன்ற காவேரிக் கரையில் அவள் துள்ளித் திரியும் புள்ளி மான் போலப் பொழுதை உல்லாசமாகக் கழித்த காலமுண்டு. பிள்ளைப் பிராயமுதல் மங்கைப் பருவம் வரை அவள் ஆற்று மணலில் பலவகை ஆட்டங்கள் ஆடியதுண்டு. இணைபிரியாத தன் தோழிகளில் முதல்வளாக இளவேனில் திகழ்ந்தாள். வண்டல்பாவை செய்து விளையாட ஆற்று மணல் அவளுக்கு உதவியதுண்டு. சிறுசிறு மணல் வீடுகள் கட்டி அவள் மகிழ்ந்ததுண்டு. அதெல்லாம் குழந்தைப்பருவ நினைவுகள்!

இப்போது அவள் பூத்துக் குலுங்கும் ஒரு மங்கை. இப்போதும் அவள் ஆற்றுக்குநீரெடுத்துச் செல்ல வருவதுண்டு. நீண்ட நாட்களுக்கு முன் கண்ட கனவுபோல, பிள்ளைப்பருவ நினைவுகள் மங்கிவிட்டன. என்றாலும் கணநேரம் அவள் சின்னஞ்சிறு குழந்தையின் சிங்கார விளையாட்டுகளில் திளைப்பதுண்டு. பழங்கால எண்ணங்களில் மூழ்கி அவள் வழக்கமாக நீர் மொள்ளும் இடத்திற்கு மிகத் தள்ளி வந்துவிட்டாள்.

யாரும் எதிர்ப்பார்க்காத அந்த இடத்தில் கரையோரமாக ஒரு படகு தெரிந்தது. ஆற்றுப் போக்கு அதை அடித்துக் கொண்டு போகாதவாறு அப்படகைக் கயிற்றினால் கரையோரம் பெரிதாக வளர்ந்திருந்த ஆலமரத்தின் பருத்த விழுது ஒன்றில் கட்டியிருந்தது. நாணல் வேறு கரையோரம் புதர்புதராக மண்டியிருந்தது. நீரெடுக்க வந்த அவள் அபூர்வமான இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த அந்த அதிசயப் படகை உற்று நோக்கினாள். அரண்மனையைச் சார்ந்த உல்லாசப் படகு அது என்றறிய அவளுக்கு அதிக நேரம் ஆகவில்லை. சோழ அரசாங்க இலச்சினை முத்திரை அப்படகில் ஆழமாகப் பொறிக்கப்பட்டிருந்தது.

அவளுக்கு ஒரே வியப்பும் மகிழ்ச்சியுமாக இருந்தது. இடுப்பில் இருந்த குடத்தை எடுத்து அடர்ந்த நாணல் புதர்மேல் வைத்தாள். குடம் தரையை அடையாது அடர்த்தியான புதர்மேலேயே அமர்ந்தது. உற்சாக வெறியில் அவள் படகில் ஏறி அப்படியும் இப்படியும் நடந்தாள். அரண்மனைப் படகில் யார் வந்தனர்?

என் படகு இப்படி யாரும் வராத இடத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது? ஏதாவது அற்புதம் நடக்கிறதா? ஒன்றும் புரியாது பிரமித்துப்போனாள் அவள்.

என்ன தோன்றிற்றோ, என்னவோ ஆலமர விழுதில் கட்டப்பட்டிருந்த தடித்த கயிற்றை அவள் கரங்கள் மெதுவாக அவிழ்த்தன. காவேரியாற்றின் சிறுசிறு அலைகள் படகை அப்படியும், இப்படியும் அசைத்தன. மிருதுவான தென்றலால் முன்னுக்கு விரட்டப்பட்ட அலைகள் படகில் மோதி, தாங்கள் அங்கே இருப்பதை, மோதின ஓசையால் அறிவித்துவிட்டு உடைந்து மறைந்தன. ஆலமரத்தில் கட்டப்பட்ட கயிற்றின் முனை இப்போது அவள் உள்ளங்கையில் பிடிக்கப்பட்டிருந்தது. படகின் மேலுள்ள ஆசையால் கரைப்பக்கம் அவள் இழுத்தாள். பொன்னிக்கும் படகின்மேல் கொள்ளை ஆசை போலும்! அது தன்பக்கம் இழுத்தது. ஒரே படகை அழகுவளம் கொண்ட ஒரு பெண்ணும், நீர்வளம் கொண்ட இன்னொரு ஆற்றுப் பெண்ணும் இழுப்பதைப் பார்த்து ஆலமர இலைகள் ஆரவாரித்தன; தென்றல் சிரித்தது. ஆற்றோட்டத்தின் வேகம் படகை அடித்துக் கொண்டே போய்விட்டது. ஏன் கயிற்றைத் தொட்டோம் என்று அவள் வருத்தப்பட்டாள்.

அதே சமயம் 'தொபீல்' என்று ஆற்று நீரில் யாரோ குதித்தனர். அலை இழுத்த பக்கமாகப் படகு சென்றது. அதைத் தொடர்ந்து யாரோ ஒருவன் நீந்திக்கொண்டிருந்தான். மிக வேகமாக முன்னேறி அவன் படகின் ஒரு ஓரத்தைப் பிடித்து அதில் ஏறிக்கொண்டான். துடுப்பு அவன் கையில் ஏறியது. வேகமாக அவன் அதை வலித்து அவள் நின்ற ஆலமரத்தடிக்கு வந்தான்.

அவளுக்கு இப்போதுதான் அமைதி பிறந்தது. படகோட்டி அவளைப் படகில் ஏறிக்கொள்ளுமாறு சொன்னான். அவனை ஏறிட்டுப் பார்க்க அவள் கண்கள் கூசினாலும், அவன் சொன்னதை மறுக்க அவள் மனம் ஒப்பவில்லை. படகில் ஏறி உட்கார்ந்தாள். அவன் "போகலாமா?" என்று கேட்ட கேள்வியில் அன்பு நிறைந்திருந்தது. அவளுக்கு அவனுடன் பேச ஆசைதான்! ஆனால் வார்த்தை தொண்டையை விட்டுவெளிவரவில்லை. 'உம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள். துடுப்பு தண்ணீரைக் கிழித்தது. படகு உல்லாசமாக முன்னேறியது.

சிறிது நேரம் சென்றதும் அந்த முகத்துக்கு உடையவனை அவள் சடைக்கண்ணால் நோக்கினாள். அவள் விழிகள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. மார்பகம் விம்மித் தாழ்ந்தது. முகம் ரோஜாச் சிவப்பு நிறம் பெற்றது! அவளால் நம்பக்கூட முடியவில்லை. இப்படியும் இருக்குமா? அவராவது படகு ஓட்டுவதா

வது? சே, வெறும் பிரமை! நம்மைப் படகில் ஏற்றி அவர் துடுப்புப் போடுவதாவது, நாட்டு மன்னர் நமக்குப் படகு செலுத்துவதாவது, சே, கனவு! வெறும் கனவு! வீண் கனவு! அவள் நெஞ்சம் வேகமாகத் துடித்தது. சுற்றியிருந்த ஆறு, கரை, நாணல், ஆலமரம் எல்லாம் சுழன்றன. அவளுக்கு ஒரே மயக்கமாக இருந்தது!

* * *

தொண்டையைத் திடீரென்று அடைத்துக் கொண்டதுபோல வேதனைப்பட்ட அவள், கண் விழித்தாள். மஞ்சத்தில் ஒரு வியர்வைக் குளமே உண்டாகிவிட்டிருந்தது. அறையில் இன்னொரு ஓரத்தில் தன் அன்னை அமைதியாகத் தூங்குவதை அவள் கண்டாள். சாளரப், திரைச்சீலை, படுக்கை, சில ஆசனங்கள், சில ஓவியங்கள், மலர்ச் செடிகள் இவைதாம் அங்கு இருந்தன. காவேரியாறு, ஆலமரம், படகு, நாணல், கயிறு, குடம் இவை ஒன்றையாவது அங்கு காணோம்! தூக்க நிலையோ நினைவு நிலையோ அறியக்கூடாத இடைநிலையில் அவள் ஆசை வேகமும், ஆழ நினைவும் தவழ

சிறந்த வெளியீடுகள்

நரிக் குறவன் (தங்கமணி) 0-4-0
மலைத் திருடன் (ராஜன்) 0-3-0
காசி ராஜா (நாரா. நாச்சியப்பன்) 0-3-0
மாஸ்டர் கோபாலன் ,, 0-3-0
காளி கோயில் ,, 0-3-0
சரவணச் சாமி ,, 0-3-0

எங்கும் விற்பனையாளர்கள் தேவை. 25% கமிஷன் தரப்படும்.

விபரங்கட்கு:

செந்தமிழ்ப் பதிப்பகம்
த. பெ. எண். 39
புதுக்கோட்டை

விட்ட அந்த நிகழ்ச்சி ஒரு நிறைவேற முடியாக் கனவு; ஆனால் தான் வெறியோடு கண்டுகொண்டிருக்கும் ஆசைக்கனவு என அவள் அறிந்தாள். அவள் உடல் தளர்ந்தது; உள்ளம் உருகிற்று! "சே, தான் எவ்வளவு வாய்ப்பிழந்தவள்; கனவில் அவரைக் கண்டும், அவரோடு பேசாமல் போனேனே? தன்னை விடப் புத்தி மழுங்கினவள் வேறு யார் இருக்க முடியும்?"

அடுத்த நாள் காலை. மன்னன் குலோத்துங்கனின் புகழ்க் கீதங்கள் இசைவல்லுநர்களால் பாடப்பட்டன. அமுதவெள்ளம்போல அவை இனித்தன அவளுக்கு. மாடியைவிட்டுத் தெருவுக்கு வந்து நின்றாள் அவள். அப்பாடல்களில்தான் அவளுக்கு என்ன ஈடுபாடு! எத்தனைக் கொள்ளை இன்பம்! திறந்தபடியே இருந்த விழிகள் அசையாது தூரத்தே நோக்கிக்கொண்டிருந்தன. யானைமீது அமர்ந்து மன்னர் பவனி வந்துகொண்டிருந்தார். தோகைமயிலாளுக்கு ஒரே ஆசை வெறி! அசையாத பதுமைபோல நின்ற அவள், "ஏ, கண்களே! இமைகளை மூடி விடாதீர்கள். கனவு பாதியிலேயே முடிந்துவிடும்! எனக்காக நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்!" என்று தன் விழிகளுக்குக் கட்டளையிட்டாள். மக்கள் குதூகலத்தோடு மன்னரை வாழ்த்திக்கொண்டிருந்தனர்.

அவளுடைய சுடும் உடலை ஏதோ பனிக்கரங்கள் தீண்டின. அந்த மெல்லிய ஸ்பரிசத்தை அவள் உணர்ந்தாள். ஆனால் திரும்பவில்லை. "என்னுடைய அங்கங்களே! என்னோடு கொஞ்சம் ஒத்துழையுங்கள். நீங்கள் அசைந்தாலோ, திரும்பினாலோ என் கனவு கலைந்துவிடும். நான் வாய்திறந்து சொல்லுமட்டும் அசையக்கூடாது" என்று அவள் தன் உடலின் உறுப்புகளுக்கு ஆணையிட்டாள். அவளுடைய தோள் பலமாகக் குலுக்கப்பட்டது. அவள் அசையவே யில்லை! 'கலகல' வென்ற நகைப்பொலி அவள் செவிகளுக்குத் தெளிவாகக் கேட்டது. கூடவே ஒரு பெண் குரல் மொழிந்தது:

"ஏதேது, மன்னர்மன்னர் உண்மையாக உன்னைத் தழுவி

விட்டாலும் அது உனக்கு நன வாகத் தெரியாதுபோலிருக் கிறதே! பலநாள் முன் கண்ட அப் பழைய கனவு என்றே சொல்வாய் போலும்! என்ன மயக்கம் அம்மா இது!''

குலுக்கப்பட்டவள் திரும்பிப் பார்த்தாள். பூக்குடலையுடன் தன் தோழி தன்னருகே இருப்பதை அவள் உணர்ந்தாள். தன்னைத் தொட்டது மன்னரா, அல்லது தோழியா? சுற்றிப் பார்த்தாள். மன்னரும், மன்னர் பரிவாரமும் அவளைக் கடந்து வெகுதூரம் பின்னால் போய்க்கொண்டிருந் தனர். குழப்பம் அகன்றது. தன்னைத் தொட்டது தோழி தான் என்று அவள் தனக்குள் முணுமுணுத்துக்கொண்டாள்.

திடீரென்று அவளுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அவள் தோழியைப் பார்த்துக் கேட் டாள்: "தோழி, மன்னர் பட கில் வந்தாரா? யானைமீது வந் தாரா? படகில்தானே வந்தார்? அவரே தன்கைப்படத் துடுப்புப் போட்டார் இல்லையா? காவேரி யில் நீந்திப் படகை அடைந்தார், இல்லையா?''

தோழி அயர்ந்துவிட்டாள். என்ன பதில் சொல்வது என்று தெரியாது திகைத்தாள் அவள். 'படகில்தான் வந்தார்' என்று மனமறியப் பொய் ஒன்று சொல்லி அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

''நேற்றுவரை கடன் தருகிறேன் என்று சொன்னவர் இன்று மறுத்து விட்டார்.''

"ஏன்?''

''நான் ஒரு பத்திரிகை ஏஜண்ட் என்று சொன்னேன். அவ்வளவு தான்!''

காதல்வேகம் மிக்க ஒரு பெண்ணின் இதயம் எப்படிக் கலக்கமடைகிறது என்பதை எவ் வளவு நயமாக இப்பாடல் சொல்லுகிறது! பெண் மனம் எப்படிக் குழம்புகிறது ஆசை வெறியில் என்பதையறிய ஒரு பாடல்! உணர்ச்சி வெறி ஏறிய வர்கள் ஏன் பைத்தியமாகிறார்கள் என்பதைப் பரணி ஆசிரியர் சயங்கொண்டார் எவ்வளவு நன்றாக விளக்குகிறார்!

நனவினிற் சயதரன் புணரவே பெறினுநீர்[அக்
நனவெனத் தெளிவுற(து) அதனையும் பழைய
கனவெனக் கூறுவீர் தோழிமார் நகைமுகங்
கண்டபின் தேறுவீர் கடை திறந் திடுமினோ.

—கலிங்கத்துப்பரணி

[சயதரன்—குலோத்துங்கன்; அது—புணர்ச்சி; நகை—சிரிப்பு]

வீணை நாடகம்

சகுணபாய் மான்சிங்

செல்வம் செழித்தோங்கிய அப் பங்களாவில் நிசப்தம் நிலவியது.

வெகுநேரம் குப்புறப் படுத்து விம்மிக்கொண்டிருந்த சுந்தரி, கட்டிலில் எழுந்து உட்கார்ந்தாள். அவள் அழகிய வதனம் அழுகையின் வளர்ச்சியால் வதங்கியிருந்தது. அவள் உள்ளத்தில் வேதனை பொங்கிக்கொண்டிருந்தது. கண் கோடியில் நீர்த்துளிகள் தேங்கியிருந்தன.

"அம்மா, படிப்பு வாசனையற்று, மனத்தூய்மை சிறிதுமின்றி, கபட நாடகமாடிய போலிக் கற்பரசிகள் வாழ்ந்த அந்த நாளிலே அப்பாவுடைய அந்தச் சகோதரி வீணை கற்றுக்கொடுத்த வாலிப வாத்தியாருடன் ஓடிப்போய் அவமான முண்டாக்கினளென்றால், அதற்கு நான் என்ன செய்வேன்? அவள் ஓடினுள் என்றால் எல்லோரும் அப்படிச் செய்வார்களா? படித்தறிந்த பெண்கள் அவ்வளவு இலகுவில் இழிவான அற்ப எண்ணங்களுக்கு உடந்தையாக மாட்டார்கள் என்பதை நான் உறுதியாகக் கூறுவேன். யாருடனும் தாராளமாகப் பழகலாம்; பேசலாம்; சிரிக்கலாம். உள்ளத்துத் தூய்மை ஒன்றே அவர்களின் மனச்சாட்சியாயிற்றே. அம்மா, என்னை நீயுங்கூட அறியவில்லையா? அப்பாவின் இந்தத் தப்பான அபிப்பிராயத்தைத்தவிர்க்க நீதான் உதவி செய்ய வேண்டும். நானும் மூன்று ஆண்டுகளாக வீணை கற்றுக்கொள்ள வேணுமென்று தலைகீழாக நிற்கிறேன். அப்பா விடாப்பிடியாக மறுக்கிருரே. அடுத்த வாரம் கலா மண்டபத்தில் தொடங்கப் போகும் வீணை வகுப்புக்கு நான் எப்படியும் சேரவேண்டும். வீட்டில் 'பிராக்டிஸ்' பண்ண ஒரு வீணை அவசியம். அப்பாவைச் சமாதானம் செய்து எனக்கு வீணை வாங்கித்தர நீதான் அம்மா சிபாரிசு செய்யவேண்டும் - - ."

தாய் மகளைச் சமாதானப் படுத்த முயன்றுள். மூன்று ஆண்டுகளாக வீணை வாங்கித் தர வேண்டுமென்று பிடிவாதம் பிடித்த சுந்தரிக்கு அரைமணி நேரத்துக்கு முன்னதாக அவள் அன்னை சொன்ன காரணம் வேடிக்கையாகவும், சாரமற்றுக் காரணமற்றதாகவும் காணப்பட்டது. அப்பாவுடைய தங்கை வீணை வாத்தியாரோடு ஓடிப் போனல் அதற்கு வீணை என்ன

செய்யும்? அல்லது மற்றும் நூற்றுக் கணக்காக வீணை கற்றுக் கொண்டவர்கள்தாம் அதைப் பின்பற்றினரா என வாதித்தாள் சுந்தரி.

மனோகரி தன் புதல்வியின் வாதம் சரி என்று உணர்ந்தாள். வீணைப்பைத்தியம் பிடித்திருக்கும் சுந்தரிக்கு எப்படியும் வீணை வாங்கிக் கொடுத்தாக வேண்டுமென்று முடிவு செய்து கொண்டாள். ஆனால் அதற்கு வழி—!

மௌனம் மீண்டும் நிலவியது. திடீரென மனோகரி எதையோ கண்டுகொண்டவள் போலச் சட்டென்று எழுந்து போய்ச் சுந்தரியின் காதில் என்னவோ சொன்னாள். சுந்தரியின் முகம் மலர்ந்தது. அடக்க முடியாமல் கொஞ்சநேரம் சிரித்துக் கொண்டாள். சற்று நேரம் யோசித்தாள்; மறுபடியும் சிரித்தாள். இப்படிப் பத்து நிமிஷங்கள் கழிந்தன.

வக்கீல் ரங்கநாதனுடைய 'வாக்ஸால்' கார் வரும் சத்தம் கேட்டது.

சுந்தரி திரும்பவும் சிரிக்க ஆரம்பித்தாள். நாற்காலியைக் குப்புறத் தூக்கி வீசினாள். மேஜைமீது புடவைகளை வாரி இறைத்தாள். நகைகளைக் கழற்றித் தாறுமாறாக எறிந்தாள். ஒரு முறை - இரண்டு முறை, இப்படி அவள் சிரித்துக் கொண்டே இருந்தாள். கலைந்து கிடந்த தலைமயிரைப் பிய்த்துக் கொண்டு திரும்பவும் பயங்கர

நண்பர் : (சாகக்கிடக்கிறவரிடம்) நான் ஊருக்குப் போகிறேன். மறக்காமல் தந்தியடிக்கச் சொல்லுங்கோ.

மாகச் சிரித்தாள். அவள் சிரிப்பு பங்களா முழுதுமே எதிரொலித்தது!

“மனோ, சுந்தரி எங்கே? இப்போது ரேடியோவில் ஹிந்திப் பாட்டு வரும் சமயமாச்சே? எங்கே சுந்தரி?” என்று கேட்டவாறே மனைவியை அண்டினார் வக்கீல். ஒரு நாளுமில்லாத வகையில் மனோகரி மேசை மீது கரங்களை ஊன்றியபடி விசித்து விசித்து அழுது கொண்டிருப்பதைப் பார்த்துப் பிரமித்துப் போனார் ரங்கநாதன்.

“மனோ, என்ன நடந்தது? சுந்தரி எங்கே? சிரிப்பின் எதிரொலி பலத்துக் கேட்கிறதே? யார் அது?” என்று பதட்டத்துடன் கேட்டார் அவர்.

மனோகரி பதில் எதுவும் சொல்லாமல் தேம்பித் தேம்பி

அழுவதைக் கண்டு ஆவேசங் கொண்டவராகத் தம் மனைவியின் தோளைப்பிடித்துக் குலுக்கி, "சொல், என்ன நடந்தது? சீக்கிரம்-" என்று வினவினர்.

மனோகரி அழுகைக்கிடையே "நம் கண்மணி சுந்தரிக்குப் புத்திசுவாதீனமில்லாம லிருக்கிறது. இப்படியா அவள் நிலை மாறவேண்டும்? அதோ அவள் பயங்கரமாகச் சிரிக்கிறாளே; ஐயோ-" என்று நிறுத்தினள்.

"வா, மேலே போய்ப் பார்க்கலாம்."

மாடியறையில் பயங்கரக் கோலத்துடன் பேய்ச் சிரிப்புச் சிரித்தவாறு அலங்கோலமாக இருந்த தன் மகளைக்கண்ட ரங்கநாதனுக்கு நெஞ்சை யாரோ பிளப்பது போலிருந்தது.

அவிழ்ந்து கிடந்த கேசம்; கிழிந்த புடவை; அவள் வெறித்த பார்வை.

'பைத்தியம்'

இப்படி அவர் உள்ளுணர்வு இடித்துக் காட்டியது. வக்கீலின் தலை மலையாய்க் கனத்து வந்தது. அவர் கண் கலங்கி விட்டார்.

"சுந்தரி, என் கண்மணி சுந்தரி."

சுந்தரி தந்தையின் அழைப்பைக் கேட்டால்தானே!

"நீதானே என் வீணை — இதோ, வாசிக்கட்டுமா? என்ன பாட்டு? ஓ-ஐயா சாமி".

வீணை வாசிக்கும் பாவனையில் அவள் கைகள் இயங்கின; கண்கள் சுழன்றன; முகம் பாட்டின் பாவத்துக்கு

மாறி மாறி உணர்வூட்டி நின்றது.

"எனக்கு வீணைமட்டும் வாங்கிக் கொடுக்கமாட்டாங்களாம்; பாட்டு வாத்தியாசாம், வாத்தியாரு மூஞ்சியைப் பாரு -"

திரும்பவும் அவள் பிதற்றினாள்; சிரித்தாள்.

சிந்தித்தார் வக்கீல். உள்மனம் தர்க்கம் புரிந்ததை இடைமறித்துத் தர்க்கம் செய்யத் துவக்கினாள் மனோகரி.

"பார்த்தீங்களா, உங்கள் பிடிவாதத்தின் பலனை? வீணைமட்டும் அவளுக்கு வாங்கிக் கொடுத்திருந்தால் இந்தக் கஷ்டமும், கவலையும் நேர்ந்திருக்குமா?"

"மனோ, டாக்டரை அழைத்து வரட்டுமா? ஆகவேண்டியதைக் கவனி. சுந்தரி என் மூச்சு. அவளின் இந்தக் கோர நிலையை இனிக் கணமும் காண என் கண்கள் சம்மதிக்கமாட்டா -."

"டாக்டரா - வேண்டாம். அவர் பார்த்து எதுவும் பலனளிக்காது. மேலும் அவர் வந்து பார்த்துவிட்டு எத்தனை பேரிடம் சொல்லுவாரோ? வயதுப் பெண் சுந்தரி. நாளைக் கல்யாணம் ஆகவேண்டிய பெண்... எனக்கு ஒன்று தோன்றுகிறது. முதலில் அவள் சதா அலட்டிக் கொண்டிருக்கும் அந்த வீணையை வாங்கிக் கொடுத்துப் பார்க்கலாம். ஒருவேளை அதைக் கண்டவுடனேயே மனம் மாறினாலும் மாறி விடலாம்; அதற்கும் வழி பிறக்காதுபோனால் அப்புறம் வைத்தியரை அழைத்துவரச் செய்யலாம்" என்று யோசனை கூறினாள் மனோகரி.

"இவர்தான் மிஸ்டர் புலிகேசி; நாளைக்கு என்னுடன் மல் யுத்தம் செய்யப்போகிறவர்."

துணைவியின் மனோதத்துவ விளக்கம் வக்கீலின் தர்க்க மூளையில் சரி என்றே ஏற்பட்டது.

"மனோ, வீணை வாங்கிக்கொடுத்தால் சுந்தரிக்குச் சுகமாகி விடுமா? என் விஷப் பரீட்சைக்குப் பலியாகிவிடமாட்டாளே நம் கண்மணி. அப்படியானால் இதோ வீணை வாங்கிக்கொண்டு வருகிறேன்."

அரைமணி நேரம் சென்றபின் ஒரு அழகிய கறுப்பு மரத்தில் பச்சைத் தொங்கல் பளபளத்த பூண்கள் நிறைந்த வீணையுடன் கார் வந்து நின்றது. வீணையை அவரே மகளிடம் கொண்டு சேர்த்தார். ஆனால் சுந்தரி முதலில் அதைச் சட்டை பண்ணவில்லை. வக்கீலுக்குத் திகைப்பு வளர்ந்தது. மனோகரி தைரியப்படுத்திக் கணவனின் கரங்களைப் பற்றியவாறு கீழே அழைத்துச் சென்றாள்.

இருவரும் மாடிப் படிகளைக் கடந்த தருணம் வீணை நாதம் காற்றில் பண்ணிசைத்து இழை

யும் ஒலி கேட்கவே, "மனே, அதோ வீணைச் சப்தம் ஒலிக்கிறதே" என்று துள்ளிக் குதித்தார் ரங்கனுதன்.

ஆம்; வீணை நாதம் இங்கிதத்துடன் இசைத்துக் கொண்டுதானிருந்தது. சுந்தரி தனக்கு மிகவும் பிடிக்கும் 'ஓ சாமி, ஐயா சாமி' பாட்டை அவளே வாசித்துக் கொண்டிருந்தாள். தூர நின்று அவர்கள் இருவரும் ரசித்துக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் உள்ளங்களில் அக்கணம் அளவற்ற அமைதி நிறைந்திருந்தது. அப்போதுதான் அவர்கட்குப் போன உயிர் மீண்டது போன்ற உணர்ச்சி எங்கும் பரவிநின்றது.

சுந்தரி பழைய சுந்தரியாகி விட்டாள்.

காலையில் வக்கீல் வீணை வாத்தியாரை அழைத்து வந்தார். முதல் பாடம் ஆரம்பமாயிற்று. சுந்தரி புன்னகை பூத்தாள். அவள் முறுவலில் சொல்லில் அடங்காத ஆனந்தம் நிறைந்திருந்தது. இதைக் கண்டு சொக்கிப் போனுர்கள் அவள் பெற்றோர்கள்.

பத்து மணிக்கு வக்கீல் கோர்ட்டுக்குப் போய்விட்டார்.

தாயும் மகளும் மாடியில் தனியே வீற்றிருந்தனர்.

"அம்மா, நீ பலே கெட்டிக்காரி, அம்மா. எனக்கு வீணையை எவ்வளவு சாமர்த்தியமாக வாங்கித் தந்துவிட்டாய்."

"சுந்தரி, நீதான் அசல் பைத்தியமாக நடித்துவிட்டாயே. பாவம், உன் அப்பா ஏமாந்து விட்டார். உஸ் - நம் வீணை நாடகம் அவருக்குத் தெரியவே கூடாது - ஜாக்கிரதை."

முதற் செய்தி!

'பொன்னி' பொங்கல் மலர் வழக்கம்போல் வெளிவரும் என்றுலும் நண்பர்களின் ஆர்வம் நமக்கு வரும் கடிதங்களினின்றும் நன்கு புலனுகிறது. ஆர்ட் தாளில், இணையற்ற கலைக்களஞ்சியமாகப் 'பொங்கல் மலர்' உருவாகி வருகிறது என்ற செய்தியை அனைவருக்கும் அறிவிக்க விரும்புகிறேம்.

'பொன்னி' பொங்கல் மலர்-1952
பற்றிய முதற் செய்தி இது!

பாதுஷாவின் காதல்

இளமைப்பித்தன்

'அக்பர் இறந்துவிட்டார்!' என்ற செய்தியைக் கேட்டதும் வங்காளத்தில் 'ஜாகீரா'க இருந்துவந்த 'ஷெர் ஆப்கானின்' கண்களில் நீர் தளும்பி விட்டது. கையில் பிடித்துக் கொண்டிருந்த 'ஹூக்கா'வை அப்படியே போட்டுவிட்டுச் சிறிது நேரம் வரையில் சிலை போல இருந்தான்.

அவனுடைய மனைவி 'மீர் உன்னிசா' முகத்தில் முறுவல் தவழ அங்கே வந்து சேர்ந்தாள். எனது கணவனின் இருளடைந்த முகத்தைக் கண்டதும், அவளும் கணநேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

"என்ன நடந்துவிட்டது? ஏன் இப்படிக் கண்கள் கலங்க வாட்டத்துடன் உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று அவனுடைய பாதங்களை அழுத்திப் பிடித்தபடி கேட்டாள் மீர் உன்னிசா.

ஷெர் ஆப்கான் கன்னத்தில் வடிந்திருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தளர்ந்த குரலில், "பேகம்! என்னுடைய அன்பு விளக்கு அணைந்து விட்டது. சக்கரவர்த்தி அக்பர் இறந்துவிட்டார்" என்றான். அதற்குமேல் அவனால் ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை.

உன்னிசாவின் உள்ளம் ஒருமுறை குலுங்கிற்று. திடீரென்று ஒரு பேரிடி அவளுக்கு முன்னால் வந்து விழுந்ததுபோலாயிற்று அவன் சொன்ன செய்தி!

"ஷா-இன்-ஷா போய்விட்டாரா? ஐயோ! இதை என்னால் கேட்க முடியவில்லையே?" என்று அலறினாள் அவள். உன்னிசாவுக்கு உலகமே இருளடைந்துவிட்டமாதிரி இருந்தது; விக்கி விக்கி அழலானாள்.

மீர் உன்னிசா பாரசீகத்தில் பிறந்தவள் என்ற போதிலும் அக்பரின் அரண்மனையில் ஒரு பணிப்பெண்ணாக வேலை பார்த்துக்கொண்டிருந்தாள். அக்பர் அவளைத் தன் மகளுக்குச் சமானமாக நடத்தினான். அன்பின் காரணத்தால் அவளைப் படைத்தலைவனாக இருந்த ஷெர் ஆப்கானுக்குத் திருமணம் செய்துகொடுத்து, அவனையும் வங்காள ஜாகீராக நியமித்தான். இந்தக் காட்சி உன்னிசாவுக்கும் ஷெர் ஆப்கானுக்கும் நடுவில் உயிர்ச்சித்திரமாகத் தலைதூக்கி மின்னி மின்னி மறைந்துகொண்டிருந்தது.

* * *

டில்லியில்......

அக்பரின் மகன் சலீம் பாதுஷாவாகி 'ஜஹாங்கீர்' என்ற பட்டத்தைப் பெற்றான். ஆட்சி அவனுடைய கையில் போய்ச் சேர்ந்தது. அன்று டில்லிமா நகரமே திமிலோகப் பட்டது!

'ஜஹாங்கீர்—ஜிந்தாபாத்' என்ற வாழ்த்தொலி வான்முகடு வரையில் எறிற்று. தன்னுடைய தந்தையின் ஆட்சி முறைகளைக் குலைக்காமல், அவைகளை அப்படியே பின்பற்றி நடந்து வந்தான்.

ஒருநாள், ஜஹாங்கீர், ஓய்வு கருதி ஆக்ராவில் உள்ள மாளிகைக்குச் சென்றான். தான் இளைஞனாக இருந்தபொழுது ஓடியாடி விளையாடிய இடங்களைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தான். அழகிய பூந்தோட்டங்களில் உலாவினான். குளுகுளுப்பும் நறுமணமும் கொண்ட பரிமள நீர் நிரம்பிய பளிங்குத் தொட்டிகளில் நீராடினான். பூந்தோட்டத்தின் நடுவில் ஒரு ரோஜாச் செடி எழிலுற வளர்ந்திருந்தது அவன் பார்வையில் பட்டது. அதைப் பார்த்ததும் அவனுக்குப் பழைய மகிழ்ச்சி பரபரவென்று மனதில் வந்து கூத்தாடியது. அந்த ரோஜாச்செடி, பல ஆண்டுகளுக்கு முன்னால் பாரசீக அழகி உன்னிசாவும் அவனும் சேர்ந்து வைத்தது; இன்று வனப்புடன், தென்றலில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. ஜஹாங்கீர் தன்னை மறந்து "உன்னிசா" என்று கூவினான். அந்த 'இளமான் கன்று' அவனுக்கு எதிரில் துள்ளிவந்து நிற்பதைப் போல் தோற்றியது.

'உன்னிசா......உன்னிசா...' என்று உச்சரித்தபடியே இருந்தான் ஜஹாங்கீர். எப்படியாவது ஒரு முறை—ஒரேவொரு முறை அவளைப் பார்த்துவிட வேண்டுமென்று தவியாய்த் தவித்தான்.

ஆக்ராவிலிருந்து ஓலை பறந்தது வங்காள ஜாகீருக்கு. ஷேர் ஆப்கான் ஓலையைப் பிரித்துப் படித்துப் பார்த்தான். "நீயும் உன் மனைவியும், இங்கே வந்து இரண்டு நாள் என்னுடைய விருந்தினராகத் தங்கிப் போகவும்" என்று எழுதி ஜஹாங்கீரே கையெழுத்துச் செய்திருந்தான். ஷேர் ஆப்கானுக்கு அதைப் படித்ததும் ஆத்திரம் தாங்க முடியவில்லை. ஜஹாங்கீருடைய குணம் எப்படிப்பட்டதென்பதை அவன் சிறுவயதிலிருந்தே அறிந்தவன். ஓலையைக் கிழித்து எறிந்துவிட்டு "மன்னிக்கவும், இப்பொழுது எனக்கு ஓய்வு இல்லை" என்று பதில் அனுப்பிவிட்டான்.

ஜஹாங்கீர் அரண்மனையில் உன்னிசாவின் வரவை எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தான்.

அட்டைப்படக்கதை

'மகால்' முழுவதும் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. விலை மதிக்க முடியாத இரத்தினக் கம்பளங்

களைக் கீழே விரித்து அதன்மீது புது மலர்களைப் பரப்பி வைத்திருந்தான். சித்திர வேலைப்பாடுகள் நிரம்பிய மதுக் கூஜாக்களும், கிண்ணங்களும் 'குளோப்பர்'களின் ஒளியில் பளபளத்துக் கொண்டிருந்தன. அவன் திரும்பும் இடங்களிலெல்லாம் 'உன்னிசா'வின் உருவமே பிரதிபலித்துக் கொண்டு இருந்தது. ஜஹாங்கீர் இன்பக் கனவுகளில் மூழ்கிக் கிடந்தான்.

குதிரை வீரன் ஒருவன் புயலைப் போல் உள்ளே நுழைந்து அவனுக்கு எதிரில் நின்று வணங்கினான். அவனைக் கண்டதும் ஜஹாங்கீரின் முகத்தில் ஒளி வீசியது. "அவர்கள் வந்து விட்டார்களா?" என்று கேட்டான். வீரன் பதில் சொல்லாமல் ஒரு ஓலையை மட்டும் அவனிடம் கொடுத்தான். ஜஹாங்கீர் அதை அவசரம் அவசரமாகப் படித்துப் பார்த்தான். ஷேர் ஆப்கானின் பதில் அவனுக்குக் கடுங்கோபத்தை மூட்டி விட்டது. ஓலையை வீசி எறிந்து விட்டுப் பற்களை நறநற வென்று கடித்துக்கொண்டான். தன் ஆத்திரம் கொண்டமட்டும் தரையை ஓங்கிக் காலால் உதைத்தான்.

"ஷேர் ஆப்கான், ஜஹாங்கீரின் அழைப்பையா அலட்சியம் செய்தாய்? வங்காள ஜாகீர் என்ற மமதை உன் கண்களை மறைத்துவிட்டது. உன்னை என்ன பாடு படுத்துகிறேன், பார்!" என்று கர்ஜித்தான் ஜஹாங்கீர். கோபத்தால் அவனுடைய கண்கள் நெருப்புத் துண்டங்களாயின; முகம் சிவந்தது; உள்ளம் படபடத்தமாதிரி உடலும் படபடத்தது. சற்று நேரம் புறங்கை கோர்த்தபடி அங்குமிங்குமாக உலாவினான்; அடிபட்ட புலியின் மூர்க்கத் தன்மை மூளையில் முறுக்கேறி நின்றது.

கையைத் தட்டினான். இரண்டு காவலாளிகள் வந்து நின்று வணங்கினார்கள். அவர்களிடம் ஜஹாங்கீர் ஏதோ இரகசியமாகப் பேசினான்.

* * *

வங்காளத்தில்......

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. புயலின் அறிகுறிகள் முன்கூட்டியே தென்பட்டன. கன்னங்கரிய முகிற் கூட்டங்களிலிருந்து இடிகள் முழங்கின. பருமனான மழைத்துளிகள் உதிர ஆரம்பித்தன.

நள்ளிரவு. உன்னிசா கட்டிலின்மேல் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். உயர்ந்த பூவேலைகள் செய்யப்பட்ட சால்வை அவளுடைய உடலை மறைத்திருந்தது. கட்டிலுக்குப் பக்கத்தில் ஒரு மெழுகுவர்த்தி சுடர்விட்டு எரிந்துகொண்டிருந்தது. ஷேர் ஆப்கானுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. கவலை தோய்ந்த முகத்துடன் வெளி வராந்தாவில் அங்குமிங்குமாக உலாவிக்கொண்டிருந்தான். அவனுக்கு எதிரில் சருணை வடிவான அக்பரின் உருவம் தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

மனம் நிம்மதியற்றுத் தவித்தது.

ஜஹாங்கீரின் அழைப்பை மறுத்துவிட்டதினால், அவன் எந்த நேரத்தில் எது செய்வானோ என்ற பீதி படம் விரித்துச் சீறியபடியே இருந்தது. ஷெர் ஆப்கான் இடது கையால் இடுப்பைத் தொட்டுப் பார்த்தான். சின்னஞ்சிறிய 'பிச்சுவா' தட்டுப்பட்டது.

திறந்திருந்த சாளரத்தின் வழியாக அவன் பார்வையைச் செலுத்தினான். தங்க விக்கிரகம் மாதிரி உன்னிசா உறங்கிக் கொண்டிருந்தாள். மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் சுவரின்மேல் விழுந்த கட்டில் குஞ்சத்தின் நிழல் ஜஹாங்கீரைப் போலத் தோற்றமளித்தது.

ஷெர் ஆப்கான் பெருமூச்செறிந்தான்.

பின்புறமாக ஏதோ சப்தம் கேட்டது. ஷெர் ஆப்கான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். இருட்டில் ஒன்றுமே தெரியவில்லை. மை இருட்டு அடர்ந்திருந்தது. மறுபடியும் அதே சப்தம்!

யாரோ தன்னை நோக்கி நடந்து வரும் காலடியோசை கேட்கவே, ஷெர் ஆப்கான் கண்களை இமைக்காமல் கூர்ந்து கவனித்தான். அவனுடைய உடல் முழுவதும் ஒருமுறை புல்லரித்து ஓய்ந்தது.

"யார்?"

பதிலே இல்லை. மறுமுறையும் குரலைச் சற்று உயர்த்திக் கேட்டான். மௌனம்தான் அங்கே சுழித்து நின்றது.

பளீரென்று ஒரு மின்னல்! அந்த மின்னொளியில்......

இரண்டு முரடர்கள் மீசையும் தாடியுமாகப் பளிச்சிட்டு மறைந்தார்கள். ஷெர் ஆப்கான் இடுப்பில் செருகியிருந்த 'பிச்சுவாவை'க் கையில் எடுத்துக்கொண்டு, தெம்பு நிறைந்த குரலில் உரக்க "யார் நீங்கள்?" என்று உறுமினான். அந்தச் சப்தத்தைக் கேட்டு உன்னிசா வெருண்டு போய் வெளியே ஓடிவந்தாள்.



முரட்டு உருவங்கள் இரண்டும் அவள்மீது பாய்ந்தன. ஷெர் ஆப்கான் குறுக்கே விழுந்து தடுக்கப் பார்த்தான். குறி தவறிவிட்டது.

"திருடன், திருடன்" என்று கத்தினான் அவன். அதற்குள் எதிரில் நின்ற ஒரு முரடன், கையில் பிடித்திருந்த உடைவாளை அவன்மீது வீசிவிட்டான்.

உன்னிசா அலறினாள். அவளுக்குப் பக்கத்தில் ஏதோ 'களகள'வென்று சப்தம் உண்டாகியபடி இருந்தது. அடுத்தடுத்து மின்னிய மின்னல்களின் ஒளியில் ஷெர் ஆப்கானின் தலை துண்டிக்கப்பட்டு விட்டதையும், முண்டத்திலிருந்து பெருகி ஓடும் இரத்த வெள்ளத்தையும் உன்னிசா பார்த்துவிட்டாள். திகில் பிடித்துக் கத்துவதற்கு வாயைத் திறந்தாள். ஒரு முரட்டுக் கை அவளுடைய வாயை இறுக மூடி அடைத்துவிட்டது. பிறகு என்ன நடந்ததென்று அவளுக்குத் தெரியாது.

அடுத்த கணத்தில், உன்னிசாவை வங்காளத்தின் எல்லையை விட்டே தூக்கிக்கொண்டு போய் விட்டார்கள் அந்தக் கொலைகாரர்கள். வெட்டுப்பட்ட ஷெர்

ஆப்கானின் உடல் சிறிது நேரம் துள்ளிற்று, துடித்தது; அலை மோதி மேலுங் கீழுமாக உருண்டது. பிறகு அதுவும் ஓய்ந்து விட்டது. ஒரு பயங்கரமான அமைதி அந்த இடத்தைச் சூழ்ந்து நின்றது.

* * *

பொழுது புலரும் வேளை. ஜஹாங்கீர், மாளிகையின் மேன் மாடத்தில் உட்கார்ந்துகொண்டு கீழ்த்திசையை உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்தபடியே இருந்தான்.

மாளிகைக்குள் யாரோ ஒருத்தி 'சிதார்' வாசித்துக்கொண்டிருந்தாள், மனதை உருக்கும் அந்தக் கீதத்தின் ஒலி ஜஹாங்கீரின் உள்ளத்தைத் தொட்டது. அருகில் உள்ள பூந் தொட்டியிலிருந்து அப்பொழுதுதான் கொண்டுவந்து வைத்த ரோஜாக் கொத்திலிருந்து ஒரு பூவைக் கிள்ளி நுகர்ந்து பார்த்தான். அதன் மென்மையான பட்டு இதழ்களை முத்தமிட்டான். உன்னிசாவின் செவ்விதழ்கள் நினைவில் வந்து நின்றன. வர்ண ஜாடியிலிருந்த மதுவில் ஒரு கிண்ணம் பருகினான். வாலைக் குமரியான உன்னிசாவின் ஒயில் நிரம்பிய உருவம் அவனுக்கு எதிரில் மங்கலாகத் தோன்றி மறைந்தது.

"வணக்கம், ஷா-இன்-ஷா!"

ஜஹாங்கீர் திரும்பிப் பார்த்தான். முரட்டுத் துருக்கியர்கள் இருவரும், இரும்புச் சிலைகளைப் போல் நின்றுகொண்டிருந்தனர்.

"போன காரியம் என்ன ஆயிற்று?" ஆவல் நிறைந்த குரலில் கேட்டான் ஜஹாங்கீர்.

"வெற்றி நமக்கே! ஷேர் ஆப்கானின் தலை தரையில் உருண்டு விட்டது. உன்னிசா உங்களுடைய அந்தப்புரத்தில் இருக்கிறாள்!"

அந்தப் பதிலைக் கேட்டுக் கண்கள் சிவக்கச் சிரித்தான் ஜஹாங்கீர். அவனுடைய சிரிப்பில் வெகு நாட்களாக மறைந்து கிடந்த கனலின் வெப்பம் குபீரென்று வெளியேறியது.

மறுபடியும் கிண்ணங் கிண்ணமாக மதுவைப் பருகிவிட்டுப் பொன் நாணயங்கள் நிறைந்த இரண்டு பைகளை எடுத்து அவர்களிடம் வீசியெறிந்தான். கூடவே "ஜஹாங்கீரின் மதிப்பை உணராதவர்கள் யாராக இருந்த போதிலும் சரிதான், மரணத்தின் மூலமாக அதை நிறைவேற்றிக் காட்டத் தவறமாட்டான் இந்தச் சக்கரவர்த்தி. நினைவிருக்கட்டும்" என்ற சொற்களும் விசையுடன் வாயிலிருந்து உருண்டு வந்தன.

காவலாளிகள் அந்த இடத்தை விட்டு மறைந்ததும், ஜஹாங்கீர் அங்கு மிங்குமாகக் கொஞ்ச நேரம் உலாவினான். அவனுடைய சிந்தனை சுடுகாடாய் வெந்து தகித்தது. அடிக்கடி ஷேர் ஆப்கானின் குரல் 'துரோகி! உன்னிசாவுக்காக என்னைக் கொலை செய்துவிட்டாயே! நீயும் ஒரு மன்னனா?' என்று கோரமாகக் கரகரத்துக் கொண்டே இருந்தது.

அந்தப்புரத்தில்.........!

உன்னிசா உணர்வு பெற்றவுடன் கண்களைத் திறந்து பார்த்தாள். சுற்றிலும் ஏராளமான பணிப் பெண்கள் அவளுடைய அங்க அசைவுகளை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்தில் உட்கார்ந்து ஒருத்தி மயிலிறகுகளால் செய்த விசிறியால் வீசிக்கொண்டிருந்தாள். குளிர்ந்த பன்னீர்ப் பஞ்சுகளால் உன்னிசாவின் முகத்திலும் நெற்றியிலும் மற்றொருத்தி ஒற்றிக் கொண்டிருந்தாள். உன்னிசாவுக்குப் பேச நா எழவில்லை.

கண்களைச் சுழலவிட்டுப் பார்த்து கொடிப் பொழுதிற்குள் எங்கிருக்கிறோம் என்பதை அவள் அறிந்து கொண்டுவிட்டாள். அதிர்ச்சியடைந்த மனத்தில் மீண்டும் ஏதோ ஒன்று பயங்கரமாக உருவெடுத்து நின்றது. உன்னிசா மறுபடியும் கண்களை மூடிக்கொண்டவாறு நினைவிழந்தாள்.

எங்கோ ஒரு உலகத்திற்குப் பறந்து செல்கிற மாதிரி தோற்றியது அவளுக்கு. வெட்டுண்டு இறந்த ஷெர் ஆப்கானின் தலை தட்டுப்பட்டது; இரத்தம் தெறிக்கும் விழிகளை உருட்டியபடி அவளைப் பார்த்து "பேகம்! ஜஹங்கீர் என்னை அநியாயமாகக் கொன்று விட்டான். உன்னுடைய அழகை அணு அணுவாகச் சுவைக்கவிருக்கும் அவனை அடிமைப் படுத்தி, உன் காலடிகளிலே விழுந்து கிடக்கச் செய். ஒரு நாட்டின் சக்கரவர்த்தி, ஒரு அழகியின் ஏவலாளனுன் என்று உலகமே அவனைத் தூற்றட்டும். உன்னிசா...... அந்தக் காமுகனை உன் மனம் போனபடியெல்லாம் பழி வாங்கு, பழி வாங்கு உன்னிசா... பழி வாங்கு...!" என்று கதறி ஓய்ந்தது.

உன்னிசாவின் கண் கடையிலிருந்து கண்ணீர் வீழ்ச்சி பெருகிச் சரிந்துகொண்டிருந்தது.

* * *

பல மாதங்களுக்குப் பின்......!

ஜஹாங்கிருக்கு மூளை குழம்பிப் போய்விடும்போல இருந்தது. அரசாங்க வேலைகளில் அதிகமாகக் கவனம் செலுத்த அவனால் இயலவில்லை. அழகாக அலங்கரித்துக்கொண்டு 'தர்பாரு'க்குப் போவான்; வருவான். அவ்வளவுதான். மற்ற காரியங்கள் முழுவதையும் அவனுடைய தளபதி மகபத்கானிடம் ஒப்படைத்துவிட்டான். ஜஹாங்கிரின் மனமெல்லாம் உன்னிசாவிடமே லயித்திருந்தது. வானத்தில் எத்தனையோ பிறைகள் வளர்ந்து, தேய்ந்து விட்டன; வட்ட நிலவுகள் ஒளி வீசி மறைந்து விட்டன. என்றபோதிலும் உன்னிசாவை அவன் ஒரு முறைகூட நேரில் சந்திக்கவில்லை. ஆனால் ஒரு பட்டத்து ராணிக்கு வேண்டிய சகல மரியாதைகளையும் அவளுக்குத் தவறாமல் செய்தான். 'அவளை எந்த முகத்துடன் போய்ப் பார்ப்பது?' என்ற கவலைதான் அவனைச் சித்திரவதை செய்துகொண்டிருந்தது.

அதை மறக்க அவன் கலைக் கூடத்திலேயே அல்லும் பகலுமாகக் கிடந்தான். கவிஞர்களை அழைத்துக் கவிகள் புனையச் செய்தான்; இயற்கை அழகை வருணித்துப் பாடும்படி கட்டளையிட்டான். காவியங்களை இயற்றச் செய்தான். ஓவியங்களை வரையச் சொன்னான். ஒழிந்த நேரங்களில் அளவுக்கு மீறி மதுவைக் குடித்தான். எப்படியாவது உள்ளத்தில் அமைதியைக் குடியேறச் செய்ய வேண்டுமென்று படாத பாடு பட்டான். பலன் இல்லை. கணக்கற்ற இரவுகளைத் தனிமையிலேயே கழித்தான். அப்படி இருந்தும் அழகி உன்னிசாவின் உருவம் அவனைக் காந்தம்போல் கவர்ந்து அந்தப்புரத்தின் பக்கமாகவே இழுத்தது.

ஒருநாள் இரவு!

வசந்த காலத்தின் முழு நிலா உலகத்தைப் பாலொளியால் நனைத்துக் கொண்டிருந்தது. ஜஹாங்கீர் தன் அறைக்குள் உட்கார்ந்திருந்தான். அவனுடைய கையில் மிகவும் நேர்த்தியான சரிகை வேலைப்பாடுகள் அமைந்த ஊதா வர்ணத் துணி ஒன்று சதுரமாகத் தொங்கிக்கொண்டிருந்தது. அவன் அந்தத் துணியை அடிக்கடி பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அதில் இரண்டு இளம்பறவைகள் ஜோடியாகச் சேர்ந்து பறப்பதைப்போல் சரிகை இழைகள் ஓடியிருந்தன. உன்னிசா அதை அவனுக்கென்றே தன் கைகளால் தயாரித்து அனுப்பி வைத்திருந்தாள்.

'ஒரு ஜோடிப் பறவைகள்!'

இதற்கு என்ன அர்த்தம்? உன்னிசாவின் மனம் மாறிவிட்டதா? அல்லது 'இளம் பறவைகளின் ஜோடியில் ஒன்றைப் பிரித்த படுபாவியே, இதைப் பார்த்தாவது உன் மனதை மாற்றிக்கொள்!' என்று மறைபொருளாகத் தெரிவிக்கிறாளா?

ஜஹாங்கீர் சிந்தனையில் மூழ்கியவனாய் வெகு நேரம் அப்படியே இருந்தான். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவனாய் அந்த இடத்தை விட்டுக் கிளம்பி, நேராக அந்தப்புரத்தை நோக்கி நடக்கலானான்.

நிலவின் வெளிச்சத்தில் அவள் இருந்த மாளிகையைச் சுற்றி வலம் வந்துகொண்டிருந்தான் ஜஹாங்கீர். 'உள்ளே போகலாமா வேண்டாமா?' என்ற எண்ணம் மனத்தை அலைத்தது.

'ஜன்னல்'லிலிருந்து சிதாரின் இன்னிசையுடன் குழைந்து முகிழ்த்தெழுந்த ஒரு பாட்டு லேசாக வீசிய பூந் தென்றலில் ஒன்றி உறைந்தது.

ஜஹாங்கீர் நிமிர்ந்து பார்த்தான்.

வர்ணக் கண்ணாடிகள் பதித்த அந்த மாளிகை நிலவொளியில் பளபளத்துச் சிரித்துக்கொண்டிருந்தது.

அந்தக் கீதம்... அந்தக் குரல்... அந்த இனிமை...

ஜஹாங்கீர் தன்னையே மறந்து விட்டான். எத்தனையோ காலமாகக் கேட்காத உன்னிசா

வின் குரலைக் கேட்டதும் அவனுக்கு ஒரு முறை உடம்பெல்லாம் குலுங்கிற்று. ஒவ்வொரு அடியாக நகர்ந்து அந்தப்புரத்திற்குள் நுழைந்தான். மலர்கள் குலுங்கும் பூஞ்செடிகளெல்லாம் காற்றில் அசைந்தாடிய காட்சி, டில்லியின் பாதுஷாவை முகமன் கூறி மகிழ்வுடன் 'வரவேற்பதைப் போல் இருந்தது.

இரத்தினக் கம்பளங்கள் போர்த்தப்பட்டிருந்த மாடிப் படிகளின்மேல் இதயம் துடிக்க மெதுவாக ஏறிச் சென்றான் ஜஹாங்கீர். அவனுடைய எதிர்பாராத நுழைவைக் கண்டதும் பணிப் பெண்கள் எல்லாம் திகைத்துப்போய்ச் சிலைமாதிரி ஆகிவிட்டார்கள்.

* * *

உன்னிசா தனிமையில் அமர்ந்து ‘சிதார்’ வாசித்தவண்ணம் உள்ளமுருகப் பாடிக்கொண்டிருந்தாள். தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறதென்றே அவளுக்குத் தெரியாமல் இருந்தது. ஜஹாங்கீர் ஓசைப்படாமல் போய் அவளுக்குப் பின்புறமாக நின்றான். நடுவில் ஒரு மஸ்லின் திரை தொங்கிக்கொண்டிருந்தது. உன்னிசா அந்த அழகான பாடலைப் பாடி முடித்துத் திரும்பினாள்!

விதவிதமான வர்ண ‘குளோப்பர்கள்’ சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அந்த வெளிச்சத்தின் நடுவில் ஜஹாங்கீர் கைகளைக் கட்டியபடி நின்றுகொண்டிருந்தான்.

உன்னிசா பதறிப்போய் ஓடி வந்து மஸ்லின் திரையை விலக்கிக்கொண்டு பார்த்தாள்.

அவன் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. பக்கத்திலிருந்த ஒரு சிவப்புநிற குளோப்பரின் ஒளி அவன் விழிகளில் படிந்து கண்களை இரத்தக் குளம் போல மாற்றிவிட்டது.

உன்னிசா இதழ்கள் நடுங்க “ஷா-இன்-ஷா” என்று அழைத்தாள். கண்டத்தைப் பிடித்து யாரோ நெரிப்பதைப்போல் இருந்தது அவளுக்கு. கைகால்களெல்லாம் நடுங்க ஆரம்பித்தன.

ஜஹாங்கீர் மௌனமாக இருந்தான்.

மறுபடியும் உன்னிசா அவனைக் கூப்பிட்டாள்.

அவளுடைய உள்ளக் கடல் கொந்தளித்துக் குமுறியது. தள்ளாடிக்கொண்டே ஒரு அடி முன்னால் பெயர்த்து வைத்தாள்.

ஜஹாங்கீர் ஓடிவந்து அவள் காலடியில் வீழ்ந்து பாதங்களைப் பிடித்துக்கொண்டு, “உன்னிசா! என்னை மன்னித்துவிடு. ஆத்திரத்தால் அறிவிழந்து, உன் கணவனைக் கொன்ற இந்த அநியாயக்காரனை மன்னித்துவிடு” என்று கதறினான். அவளுடைய செம்பஞ்சு நிறப் பாதங்களைக் கண்ணீரால் கழுவியபடி புலம்ப ஆரம்பித்தான்.

உன்னிசா பேசாமல் இருந்தாள்.

“பேசமாட்டாயா, உன்னிசா? [illegible] வாய் திறந்து ஒரு வார்த்தை பேசமாட்டாயா,

[illegible] 20803

உன்னிசா? சொல்லு......மன்னித்துவிட்டேன் என்று ஒரு வார்த்தை சொல்லு. டில்லியின் சக்கரவர்த்தி உன் கால்களில் வீழ்ந்து கெஞ்சிக் கேட்கிறான். நடந்தவைகளையெல்லாம் மறந்துவிடு. கோபம் என்னை ஒரு கொடியோனாக்கி விட்டது; கொலைகாரனாக்கிவிட்டது; என் வாழ்க்கையில் படிந்த இக்களங்கத்தின் கறையைத் துடைக்க முடியாமல் தவிக்கும் என்னைப் பார்! பார்க்கமாட்டாயா உன்னிசா? உன் பயங்கர மௌனத்தைக் கண்டு பதறுகிறது என் உள்ளம்" என்று பதைப்புடன் பேசினான் அவன்.

உன்னிசா எதிரே பார்த்தாள். ஒரு பெரிய நிலைக் கண்ணாடியில் அவர்களுடைய உருவம் விசித்திரமான ஓவியம் போலத் தோற்றமளித்தது. டில்லிமா நகரின் சக்கரவர்த்தி, தன் காலடியில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு, கணநேரம் திகைத்துவிட்டாள் அவள். 'பழி வாங்கு உன்னிசா...பழி வாங்கு' என்ற ஷெர் ஆப்கானின் குரல் அவளுடைய செவிகளிலே ரீங்காரமிட்டு மறைந்தது. உன்னிசா. அவனுடைய கைகளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி "யாரை யார் மன்னிப்பது? நடந்தது நடந்துவிட்டது. எழுந்திருங்கள் ஷா-இன்-ஷா" என்று குரல் தளரக் கூறினாள். ஜஹாங்கீர் அவளுடைய மென் தளிர்க் கரங்களைப் பிடித்துக்கொண்டு "உண்மையாகத்தான் சொல்லுகிறாயா, உன்னிசா" என்று கேட்டான்.

உன்னிசா கண்கள் கலங்கத் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது. உன்னிசா ஒரு பொற் கிண்ணத்தில் ஷர்பத் கலந்து கொண்டுவந்து ஜஹாங்கீரிடம் கொடுத்தாள்.

அவன் அதை வாங்கிக்கொள்ளவில்லை.

"ஏன்?" என்று வியப்புடன் கேட்டாள் அவள்.

"மனமார மன்னித்துவிட்டேன் என்று சொல்லி, இந்த ஷர்பத்தை எச்சில் படுத்திக் கொடு. அதைப் பருகிய பின்தான் என் நெஞ்சின் நெருப்பு அவியும்" என்று சொன்னான் ஜஹாங்கீர்.

உன்னிசா அவன் விருப்பப்படியே செய்தாள். எச்சிற்பட்ட எஞ்சிய ஷர்பத்தை வாங்கிக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்தான் அவன்.

உள்ளத்தில் சிறிது குளுமை ஏற்பட்டது அவனுக்கு. உன்னிசா அவனை அழைத்துப் போய்த் தான் படுத்து உறங்கும் கட்டிலின்மீது உட்காரவைத்து, அவனுடைய பாதங்களைத் தொட்டு முத்தமிட்டாள்.

* * *

சில நாட்களுக்குப் பிறகு...!

ஜஹாங்கீர், உன்னிசாவை "நூர்ஜகான்" என்ற பட்டப் பெயரோடு முறைப்படி மனைவியாக்கிக்கொண்டுவிட்டதாகப் பிரகடனப்படுத்தினான். அந்தச் செய்தியைக் கேட்டு டில்லிமா நகரமே வியப்படைந்தது.

ஜஹாங்கிர் நூர்ஜகானின் 'ஜனு'வைத் தனது தங்கும் இடமாக மாற்றிக்கொண்டு விட்டான். குடிப்பதும் அவளுடன் குலவுவதுமே அவனுடைய தொழிலாகிவிட்டது. மலரைச் சுற்றி வலம்வந்து இசை பாடும் வண்டைப் போல், 'பேகம், பேகம்' என்று மனங் கனிய அந்தப் பேரழகி நூர்ஜகானை எப்பொழுதும் சுற்றிக்கொண்டே கிடந்தான். அவளுக்கும் தலைகால் புரியாத ஒருவித வெறி மூண்டிருந்தது. டில்லிச் சக்கரவர்த்தியின் ஆட்சியில் புது மாறுதல்களை ஏற்படுத்த எண்ணம் கொண்டாள் அவள்.

பிரபலமான பண்டிகை தினத்தன்று ஜஹாங்கிர் ஆடம்பரமாக அலங்காரம் செய்துகொண்டான். சரித்திரமே கண்டிராத முறையில் அரண்மனையும், அரச சபையும் சிங்காரிக்கப்பட்டன. உயர்ந்த ஜாதிக் குதிரைகள் பூட்டிய இரதத்தில், பாரசீகத்தின் பேரழகியும், டில்லியின் வருங்காலச் சக்கரவர்த்தினியுமான நூர்ஜகானை அழைத்துக்கொண்டு நேராக அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான், ஜஹாங்கிர்.

அதிர்வாணங்கள் சரமாரியாக வெடித்தன! பீரங்கிகள், வெண்கலக் குரலில் முழங்கின; நகராக்கள், மந்தகதியில் அதிர்ந்தன. 'டலாயத்'துகள் முகமன் கூறி வரவேற்றார்கள். டில்லிமா நகரமே திரண்டெழுந்து அங்கே நின்றது.

ஜஹாங்கிர் நூர்ஜகானின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு தர்பார் மண்டபத்தினுள் நுழைந்தான். அவர்களுக்கெதிரே தங்க சிம்மாசனம் அழகுடன் ஜொலித்துக்கொண்டிருந்தது.

ஜஹாங்கிர் அதில் போய் உட்கார்ந்தான்; பக்கத்தில் தனக்குச் சமமாக நூர்ஜகானையும் உட்காரச் செய்தான். "ஜஹாங்கிர் ஜிந்தாபாத்" என்ற ஒலி அலையோசை மாதிரிப் பொங்கி எழுந்தது. அவன் அவளைத் திருப்பிப் பார்த்து மென்முறுவல் பூத்தான்.

ஓசை அடங்குவதற்குச் சிறிது நேரம் பிடித்தது. ஒரு மூலையில் குழப்பம் ஏற்பட்ட அறிகுறிகள் தோன்றின. இடையே ஓர் குரல் 'இன்குலாப்–ஜிந்தாபாத்' என்று ஓலமிட்டது.

பிறகு சபையில் சப்தமே கேட்கவில்லை. ஜஹாங்கிர் கண்களை உருட்டி அந்தப் பக்கமாகப் பார்த்தான். நூர்ஜகானும் பார்த்தாள்.

"பேசியது யார்?" அதிகார தோரணையில் கேள்வி பிறந்தது.

"அந்தக் குரலை எழுப்பியது நான்தான் ஷா-இன்-ஷா" என்று சொல்லிக்கொண்டே எதிரில் வேங்கை மாதிரி நின்றான் மகபத்கான்.

ஜஹாங்கிருக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'என்ன? நமது மகபத்கானா இப்படி மாறிவிட்டான்?' என்று மனதிற்குள்

நினைத்துக்கொண்டு "உன் குறைகளைத் தாராளமாகச் சொல்லலாம்" என்று கட்டளையிட்டான் டில்லியின் சக்கரவர்த்தி.

"குறைகள்! மறைந்த மன்னர் அக்பரின் உப்பைத் தின்று வளர்ந்தது இந்த உடல். இதற்குள் ஓடிக்கொண்டிருப்பது வீர இரத்தம். எனவேதான் அந்தக் குரலை எழுப்பினேன். ஷா-இன்-ஷா, நான் நீதியின் பக்கமாக நின்று உங்களைக் கேட்கிறேன். பட்டத்து ராணி உட்காரவேண்டிய சிம்மாசனத்தில் ஒரு பாரசீக அடிமைப் பெண்ணுக்கு இடமளித்திருப்பதை நான் மறுக்கிறேன்" என்றான் மகபத்கான்.

ஜஹாங்கீரின் முகம் குப்பென்று சிவந்து போயிற்று. நறநறவென்று பற்களைக்கடித்து, "மகபத்கான்! நாவை அடக்கிப் பேசு. இந்த நாட்டைப்பற்றிக் குறை கூறு; பொறுத்துக் கொள்ளுகிறேன். என் ஆட்சியைப்பற்றி அவதூறாகப் பேசு; ஆத்திரப்படமாட்டேன். என் சட்டதிட்டங்களைப்பற்றிக் கேலி செய்; சகித்துக்கொள்ளுவேன். ஆனால் என் நூர்ஜகானைப்பற்றி மட்டும் எதுவும் சொல்லாதே. பாரசீகத்து அடிமையா அவள்? பார் நன்றாக; பட்டத்து ராணி அல்லவா?" என்று கண்டங் கிழியக் கத்தினான் ஜஹாங்கீர்.

"அடிமை அழகியாக இருப்பதற்காக, அவளுக்கு நாங்கள் தலை வணங்கத்தான் வேண்டுமா ஷா-இன்-ஷா?"

"ஆம்! வணங்கத்தான் வேண்டும். இந்த நாடும் நானும் அவளுக்கு அடிமை என்பதை நினைவில் நிறுத்து."

"நிச்சயமாகவா? இது உண்மைதானா?"

"நிச்சயமாக மகபத்கான்; மொகலாய வமிசத்தின் 'முபாரக்' இந்த நூர்ஜகான். அவளுடைய மூச்சுக் காற்றே என் ஆட்சி."

"அவமானம்......அவமானம்......"

"மகபத்கான், மூடு வாயை."

ஜஹாங்கீர் அடிபட்ட புலி போலத் திரும்பி நூர்ஜகானைப் பார்த்தான். அவள் சந்திரமதி வதனத்தில் சஞ்சலத்தின் நிழல் பரவி இருந்தது. மகபத்கான் உடைவாளை எடுத்து ஜஹாங்கீரின் காலடியில் வைத்துத் தலை வணங்கிச் 'சலாம்' செய்துவிட்டு, "ஷா-இன்-ஷா, இந்த உடைவாளின்மேல் ஆணை! விரிந்து கிடக்கும் மொகலாய சாம்ராஜ்யத்தின்மேல் ஆணை! என் உயிரின் மேல் ஆணை! இந்த நூர்ஜகான் பட்டத்துராணியாக இருக்கும் வரையில், டில்லியின் எல்லைக்குள் காலடி எடுத்து வைக்கமாட்டேன். விடை கொடுங்கள். நான் போய் வருகிறேன்" என்றான்.

நூர்ஜகான் ஆவேசத்துடன் திரும்பி ஜஹாங்கீருக்கு கண்களால் ஏதோ சமிக்ஞை செய்தாள். ஜஹாங்கீர் இடிஇடி யென்று சிரித்துவிட்டு எரிக்கும் விழிகளால் அவனைப் பார்த்து, "போய் வரலாம்" என்றான்.

மகபத்கான் நொடிப்பொழுதில் அந்தச் சபையை விட்டுச் சிட்டாய்ப் பறந்துவிட்டான்.

[அடுத்த இதழில் முடியும்]

பாரதி மீண்டும் வந்தால்!

வீர. மெய்யப்பன்

வாழ்ந்திட்ட போதென்னைப் புறக்க ணித்தாய்!
மாய்ந்திட்டேன்; மண்டபங்கள் கட்டித் தந்தாய்!
வீழ்ந்திட்ட மக்கட்கே விரும்பி ஓடி
வேண்டியன செய்விரெனப் பாடி வைத்தேன்.
சூழ்ந்திட்ட புன்மையறு என்று சொன்ன
சொல்லெல்லாம் சொல்லளவில் நிற்றல் கண்டேன்.
தாழ்ந்திட்ட இந்த நிலை கண்டு மெத்தத்
தலைகுனிந்து வாடுகிறேன் தமிழ நாடே!

மாடிவைத்த வீட்டருகே குடிலு மின்றி
மரத்தடியில் மக்கள் பலர் வாடக் கண்டேன்.
கூடிவந்த மக்களிடைக் கூவினாயே!
குள்ளமனத் தாழ்வுயர்வைக் கொளுத்தினாயா?
பாடிவைத்த பாட்டெல்லாம் பாழே! ஆமாம்
பாக்களிலே சிலவரிகள் புள்ளி யிட்டாய்!
தேடிவைத்த புகழிதுவா என்றன் தாயே!
சிந்தித்துப் பாராயோ தமிழ நாடே!

வாயில்லா ஊமை நிலை போன பின்னர்
பெற்றெடுத்த மக்கள்வாய் பூட்டி வைக்கும்
தாயைப் போல் மாறினையே! உரிமை தன்னைத்
தமிழ் நாடே, பெற்றதெலாம் நீயே பெற்ற
சேயைப்போய் வாயடைக்கச் செய்வதற்கா?
சிந்தனையை, அறிவொளியைத் தேக்குதற்கா?
நாய்க்குந்தான் குலைத்திடவும் உரிமை உண்டு!
நல்லுரிமை மக்கட்குத் தாராய் நாடே!

என்றிவைபோல் என்னெதிரே முழக்க மிட்ட
எழிற் கவிஞன் பாரதியின் குரலைக் கேட்டேன்.
சென்றிவைபோல் மக்களிடம் எடுத்துச் சொல்வோம்
"செந்தமிழர் நாடுயர்க உயர்க" என்றேன்.
கண் விழித்தேன்; கனவென்று புரிந்து கொண்டேன்.
கண்டதொரு பெருங்கனவை எண்ணிப் பார்த்தேன்.
திண்மையுறு பாரதியார் இப்படித்தான்
தீப்பறக்கப் பேசிடுவார் மீண்டும் வந்தால்!

புரியாத புதிர்

சுலோசனா

ராமுவின் பிஞ்சுமனம் இரண்டாகப் பிளந்துவிட்டது. துயரமோ தாங்கமுடியவில்லை. அவனது பெரிய உருண்டைக் கண்களினின்றும் கண்ணீர் தாராளமாக வழிந்துகொண்டிருந்தது. அந்த ஒடிந்த முக்காலியின் மீது தலையைக் கவிழ்த்தவாறே லேசாக விம்மிக்கொண்டிருந்தான். சிந்திக்க அவனால் முடியவில்லை. சிந்தனை செய்து கிரகிக்க இயலாத நிலையிலல்லவா அவன் இருக்கின்றான்!

ராமு தந்தையை இழந்த நான்கு வயதுப் பாலகன். அவனுடைய ஏழைத்தாய் அவ்வீட்டின் ஒரு அறையை வாடகைக்கமர்த்திக் கொண்டு வாழுகிறாள். 'நாலு' வீட்டில் வேலை செய்து பிழைப்பவள் அவள். விடியுமுன்னே வேலைக்குச் சென்றுவிடும் அவள் இருட்டிய பின்னர்தான் வீடு திரும்புவாள். ராமு தன்னந்தனியாக வீட்டிலிருப்பான். தெருப்பிள்ளைகளோடு விளையாடப் போகமாட்டான். புழுதியிலும் சகதியிலும் உருண்டு உடம்பைக் கெடுத்துக்கொள்ள மாட்டான். தெருவில் விற்கும் பண்டங்களை வாங்கித் தின்ன மாட்டான். வீட்டுப் படியில் உட்கார்ந்து ஏதாவது சிந்தனை செய்துகொண்டிருப்பான்—அல்லது தெருவில் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருப்பான். மாலையில் அம்மாவின் வரவிற்காக அவனது தனிமை நெஞ்சம் ஏங்கிக் கொண்டிருக்கும். அம்மாவின் அன்பு வெள்ளத்தை அள்ளிப் பருக அவனது சிறு உள்ளம் தவித்துக்கொண்டிருக்கும். அவனிடம் அன்பைப் பொழிந்து கொஞ்ச வேறு யார் இருக்கிறார்கள்? அவனுடைய அன்னை தான் அவனது உலகம். குரு; அன்புத் தெய்வம்; இரு நெஞ்சுகளும் ஒன்றாய் இணைந்திருந்தன. அதிலே இருவரும் கண்ட இன்பத்தை யாரால் விவரிக்க இயலும்!

சில தினங்கள் கடந்தன. அதே வீட்டில் வேறொரு அறையை வாடகைக்கமர்த்திக் கொண்டு புதிதாய் மணந்து கொண்ட தம்பதிகள் குடிவந்தனர். ராமுவைப் போல அவர்களும் ஏழைகள்தாம். ஆனால் அந்தப் பெண் வேலைக்குச் செல்லவில்லை. அவ்வாலிபன் பெயர் கோவிந்தன்—ஏழைத் தொழிலாளி. புதிய வீட்டிற்குக் குடிவந்த மறுநாள் அவன் வேலையினின்று திரும்புகையில், வாசலில் நின்றுகொண்டிருந்த ராமுவைக் கண்டான். அவனது முகம் மலர்ந்தது. புன்னகை புரிந்தவாறே, "தம்பீ! நீயும் இங்கு தானா வசிக்கிறாய்?" என்று கேட்டவன் அன்போடு ராமுவின் பூப்போன்ற கன்னத்

தில் ஒரு தட்டுத்தட்டினான். ராமுவின் நெஞ்சம் பூரிப்பால் நெகிழ்ந்தது. அக்கணமே அவனது குழந்தை மனதைக் கோவிந்தன் கவர்ந்து விட்டான்!

கோவிந்தனும் ராமு என்றால் உயிரை விட்டான்! அடிக்கடி அவனுக்கு மிட்டாய் வாங்கிக் கொடுப்பான். மடியில் வைத்துக் கொஞ்சுவான். சினிமாவிற்கு அழைத்துப்போவான். ஒரு சமயம் சட்டை கூடத் தைத்துக் கொடுத்தான்! மாமாவின் அன்பு ராமுவைக் குதூகலப் படுத்தியது. அன்னையோடு கொண்டிருந்த அன்பைக் கோவிந்தனும் பகிர்ந்து கொண்டான்!

"ராமு, உன் கண்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன! ஆப்பிள் பழத்திற்கும் உன் கன்னத்திற்கும் என்ன வித்தியாசம்?" என்று கூறிக் கொண்டே ராமுவை அவன் தூக்கி முத்த மிடுகையில் ராமுவின் பிஞ்சு மனம் அடையும் மகிழ்ச்சியை என்னென்பது!

மாதங்கள் மாறிக் கொண்டே வந்தன. கோவிந்தனிடமுள்ள ராமுவின் அன்பும் வளர்ந்து கொண்டே வந்தது. ஆனால் — திடீரென்று அன்று நடந்த சம்பவம் ராமுவை நிலை தடுமாறச் செய்து விட்டது!

ராமு 'மாமா'வின் அறைக்குச் சென்று கதவை மெதுவாகத் தட்டினான். "யார்?" என்று சற்று உரக்கக் கேட்டான் கோவிந்தன் உள்ளேயிருந்தபடியே. "நான் தான் மாமா— ராமு!" என்று தனது மழலைச் சொல்லால் பதில் கொடுத்த ராமு கதவை நோக்கிப் புன்னகை புரிந்தான்.

"இப்போது திறக்க முடியாதடா. தொந்தரவு செய்யாதே; தெரிந்ததா?"

இது கோவிந்தனின் மறுமொழி! தலையில் இடி விழுந்திருந்தால் கூட ராமு திக்பிரமையடைந்திருக்கமாட்டான். மாமாவின் பேச்சு அவனைத் திடுக்கிட வைத்து விட்டது. தனது காதுகளையே நம்பாதவன் போல் சில விநாடிகள் ஸ்தம்பித்து நின்றுவிட்டான். கிறுகிறுவென்று சுழன்ற தலை, மறுபடியும் சுயபுத்தியைக் கொண்டு வந்தபோது, கனவிலிருந்து விழித்துக்கொண்டவன் போலச் சட்டென்று நிமிர்ந்தான் ராமு. கோவிந்தனின் விபரீதமான சொல்லம்பு அவனது மெல்லிய இதயத்தின் ஆழத்தில் குத்தியதினால் துயர இரத்தம் வடிய ஆரம்பித்தது.

"மாமாவா இப்படிப்பேசினார்! ஏன்?" என்று தனக்குள் தானே கேட்டவாறே அவ்விடம் விட்டு மெதுவாக நடந்தான் ராமு. அவனால் விடை கூற முடியவில்லை. அது புரியாத புதிராக இருந்தது.

துயரத்தைச் சொல்லி ஆறுதலடைய அம்மா இன்னும் வரவில்லை. ராமு எங்கே போவான்? அம்மாவின் இருண்ட அறைக்குள் சென்று, ஓர் மூலையில் கிடந்த ஒடிந்த முக்காலியை அணுகியவன், அதன் மீது தலை

யைச் சாய்த்துக்கொண்டான். அவனது இளநெஞ்சம் சொல்ல முடியாதவேதனையைத் தந்தது. துயரத்தை அடக்க முடியாமற் போகவே, கண்களிலிருந்து கண்ணீர் சூடாக பாய ஆரம்பித்தது.

மாமா ஏன் கோபித்தார்? ஏன் தன்னை உள்ளே விடாதபடி விரட்டிவிட்டார்? தன் மீதுள்ள அவரது அன்பு திடீரென்று குறைந்து விடக் காரணமென்ன? அவரது விபரீதப் போக்கின் அர்த்தம்தானென்ன? ராமுவிற்குப் புரியவில்லை.

"அம்மா! கோவிந்த மாமா ஏன் இன்னிக்கு என்னை அவர் வீட்டிற்குள்ளே போகக் கூடாதுன்னு விரட்டிவிட்டார் அம்மா? கோபமா இருக்காரே!''

"அதெல்லாம் நீ கேட்கக் கூடாது; தெரியுமா? சிறு பிள்ளைகள் ரொம்பப் பேசுவது நல்லதல்ல!''

கொஞ்ச நஞ்சமிருந்த தைரியமும், உறுதியும் ராமுவின் மனதை விட்டு அகன்று விட்டன. அம்மாவுமா இவ் விதம் பேசுகிறாள்? ராமுவிற்குப் பொறுக்கவில்லை! சரேலென்று வெளியே சென்றவன், சுவரில் சாய்ந்து கொண்டு விம்மி விம்மி அழுதான். அன்று இரவு ராமுவுக்கு உறக்கம் வரவில்லை. ஓரிருமுறை வெளியே எழுந்து சென்ற அவன் அன்னை வெகுநேரம் சென்ற பின்னரே திரும்பி வந்தாள். வீட்டில் பேச்சுக்குரல் பலமாகக் கேட்டது. ராமுவிற்கு ஒன்றும் புரியவில்லை. தெரிந்துகொள்ள விரும்பவுமில்லை! அவனது எண்ணமும் கருத்தும் மாமாவின் 'கடுஞ் சொல்லின்' மீதே ஒன்றியிருந்தன. மாமாவின் கோபத்தின் காரணத்தை யூகிக்க முடியாமல் போனபடியால் அவனது மனம்

நிம்மதியை இழந்து விட்டது. படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான். அவனால் மறக்க முடியவில்லை. அவன் குழந்தை ஆயினும் அவனது மனம் ஆச்சரியமாக அமைந்திருந்தது.

விடிந்தது. மாமாவின் கோபத்திற்குக் காரணத்தை அறியாவிட்டால் உயிர் போய்விடும் போலிருந்தது ராமுவிற்கு. தள்ளாடியபடியே மெதுவாக எழுந்தான். கோவிந்தனின் அறையை நோக்கி ஓசை காட்டாமல் நடந்தான். நெஞ்சு 'பக் பக்'கென்று அடித்துக் கொண்டிருந்தது. அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

அறைக்கதவு பூட்டியிருந்தது. தட்டுவதற்குப் பயந்தான். எனினும் உள்ளத்தில் குழம்பிக் கொண்டிருந்த சமாதானமின்மை — மாமாவின் கோபம் என்னவென்பதை அறிந்து விட வேண்டுமென்ற வைராக்கியம்— அவனுக்குப் புது ஊக்கத்தைக் கொடுத்தது.

"மாமா!"

உள்ளே குழந்தை அழும் குரல் கேட்டது. அந்தப் புதுக் குரல் ராமுவின் மனதில் எவ்வித விபரீத எண்ணத்தையும் கொடுக்கவில்லை. அவன் ஆச்சரியப்படவுமில்லை. மாமாவின் குரலைத் தவிர வேறு எந்தக் குரலும் அப்போதும் அவன் காதில் விழுமா என்ன?

"யாரது? ராமுவா? கதவு சாத்தியேதானிருக்கிறது. திறந்துகொண்டுவாயேன்!' மாமாவின் குரல் சாந்தமாகவேயிருந்தது. என்றாலும் 'பழைய அன்பு' அதில் ஒலிப்பதாகப் படவில்லை ராமுவிற்கு.

கதவைத் திறந்து உள்ளே எட்டிப்பார்த்தான். கோவிந்தனின் மனைவி படுத்துக் கொண்டிருந்தாள். பக்கத்திலிருந்தான் கோவிந்தன். அவனது மடியில்— ஆ! அது யார்? ராமு விரிந்த கண்களோடு நோக்கினான்.

'செக்கச் செவே' லென்று பொம்மை போன்ற ஒரு அழகிய குழந்தை!

கோவிந்தன் புன்னகை புரிந்தான். "ராமு, இது யாரென்று தெரிகிறதாடா?" என்று கேட்டான்.

யாரென்று தெரிந்தாலென்ன, தெரியாவிட்டாலென்ன — ஏனோ ராமுவின் உள்ளம் ஏமாந்து விட்டது. மாமாவிடம் கேட்க வேண்டுமென்றிருந்த கேள்வி அவன் நாவோடு நின்று விட்டது.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை தான். ஆனால் யாரோ அப்போது, "தம்பி! முன்னைப் போல் மாமா உனக்கு மிட்டாய் வாங்கிக் கொடுப்பாரோ என்னவோ?" என்று தனது காதில் ஓதினாற் போலிருக்கவே, ராமுவிற்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. மாமாவின் கேள்விக்குப் பதில் கூட உரைக்காமல் அவ்விடம் விட்டகன்றான் அக்குழந்தை!

நமக்குள்ளே

சுகி

8

மத்திய சர்க்கார் மந்திரி ஒருவர் மேசையில் தந்தி ஒன்று இருந்தது. அந்தத் தந்தியில் “தாயார் அபாயம்; உடனே புறப்பட்டு வரவும்” என்ற எழுத்துக்கள் இருந்தனவாம். மந்திரி ‘பைல்’களை அப்படியே போட்டுவிட்டுப் புறப்பட்டார். விமானம் பறந்து சென்று இறங்கிற்று. பின்னர் 40 மைல் தூரம் ஜீப் ஓடிக் கொண்டிருந்தது. ஊர் நெருங்கியதும் அவருக்குத் தமது தாயார் காலமாகி 20 ஆண்டுகள் ஆன விபரம் நினைவிற்கு வந்ததாம். இப்படி ஒருவர் தம்முடைய ஞாபக சக்தியினால் திண்டாட முடியுமா என்பது யோசனைக்குரிய விஷயம். ஆனால் அவருடைய தாய் பக்தி இருக்கிறதே அதைபோற்றவேண்டும். ஞாபக சக்தி குறைவாக இருந்தாலும் தாய்ப்பாசத்திற்கு இதை விடச் சிறந்த கதை உலகில் இருக்க முடியாது என்பது என்னுடைய தீர்மானம். அவர் மேசையில் இருந்த தந்தி, எத்தனையோ செகரட்டரிகளில் ஒருவர் தமது லீவுக்கு அத்தாட்சியாக அடக்கம் செய்திருந்ததாக இருக்கலாம்.

* * *

பிறருக்கு வரும் துயரைத் தனதாகப் பாவிக்க வேண்டுமென்று அறிவியல் நூல்கள் பிரசாரம் செய்கின்றன; வாழ்க்கையில், பிறருக்கு வரும் இன்பங்களைத் தன்னதாகப் பகிர்வதைத் தான் காண்கிறோம்.

* * *

உள்ளிப்பூண்டு நாற்றம்சிலருக்குப் பிடிக்காது. இந்தக் கூட்டத்தில் என்னையும் சேர்க்க வேண்டாம். உள்ளிப்பூண்டை மருத்துவ அருமை தெரிவதற்கு முன்னதாகவே நான் சாப்பிட்டவன். தன் கட்சிக்கு அநுகூலங்கள் ஏற்பட்டமாதிரி இன்று உள்ளிப்பூண்டின் பெருமை அறிந்தேன். முன்னாளில் குழந்தை பிறந்த வீட்டிற்குள் தலை நீட்ட முடியாது. ஆளைப் பிடித்து வெளியே தள்ளும் இந்தப் பூண்டின் மணம். இலை என்றால் வாழை யிலை, பருப்பு என்றால் துவரம் பருப்பு என்னும் பெருமையையடுத்து பூண்டு என்றால் உள்ளிப் பூண்டுதான். உணவுப் பண்டமாகவும் மருந்துச் சரக்காகவும் அநாதி காலந் தொட்டு நாம் இதை உபயோகித்து வந்திருக்கிறோம். நாகரிக மிக்க ரோமாபுரியிலும், பிரமிட்டு என்ற உலகத்து அதிசயத்தைக் கட்டிய தொழிலாளர்களும் இதை உபயோகித்ததாகத் தெரிகிறது. உள்ளிப் பூண்டின் குணம் மேல்நாட்டாருக்கு எந்த நூற்றாண்டில் தெரிந்ததோ என்னவோ, நமக்கு வெகு கால மாகத் தெரியும். அதாவது

விஷயங்களை நிகண்டில் செய்யுள்களாகப் பதிப்பித்த நாட்களிலேயே பூண்டின் அருமை தெரிந்தவர்கள் நாம்.

சன்னியொடு வாதந் தலை நோவு
தாளின் வலி
மன்னிருவ நீர்க்கோவை வன்சீதம் —
அன்னமே
உள்ளுள்ளிக் கண்பாய் உளைமூல
ரோகமும் போம்
வெள்ளுள்ளி தன்னால் வெருண்டு.
(குணபாடம்)

* * *

புதிய புதிய விஞ்ஞானப் புதுமைகளைக் கண்டு பிடிப்பவர்கள் எவ்வளவு போற்றுதற்கு உரியவர்களோ, அவ்வளவு பெரிய தொண்டர்களே புதிய ரகத் தின்பண்டங்கள், உணவுப் பொருள்கள் கண்டு பிடிப்பவர்களும். ஆனால் இவர்கள் விஷயத்தில் நன்றியற்றவர்களாக நாம்நடந்துகொள்கிறோம்; பாராட்டுவதில்லை.

* * *

நம்முடைய சாப்பாட்டு முறையில் ஒரு அதிசயம். உணவு என்ற எல்லைக் கோட்டுக்குள் மருந்துச் சரக்குகளையும் பக்குவம் செய்து சாப்பிடுவோம். உள்ளிப் பூண்டின் ரசம், ஊறுகாய் சாதத்திற்கு மட்டுமல்ல. அது நமக்குள்ள காசம், ரத்தக் கொதிப்பு, சில வேளை ஏற்படும் வரட்டு இருமல், மார்ச்சளி இவை வரவொட்டாமல் தடுப்பதற்காகத் தான் நாம் சேர்த்துக்கொள்ளுகிறோம். உடலுக்குள்ளே வியாதிகள் வராதபடி தடுக்கக் கூடிய பென்சிலின் என்று அதைப் போற்றலாம். நாம் அதிகமாக உபயோகிப்பதைப் பார்த்து இதிலுள்ள சாரத்தை ஆராய்ந்த போது, இதில் அதிகமாக பி, ஸி வைட்டமின்களும் சற்றுக்குறைவாக ஏ வைட்டமினும் இருக்கிறதாம். இம்மட்டா? உடம்புக்குத் தேவையான சுண்ணும்பு, கந்தகம், காரம் முதலான சத்துக்கள் வேறு இருக்கின்றன.

* * *

முன்னாளில் பிறர் சொல்லித் தெரியாமல் பழக்கத்தாலேயே சாப்பாடு முதல் சமூகம் வரையில் சகல விபரங்களையும் புரிந்து கொண்டோம். இப்போது எதற்கும் ஆராய்ச்சி தேவையாக இருக்கிறது.

* * *

நேற்றிரவு என் தூக்கத்தைக் கெடுக்க வந்ததைப் போல் பூனைகளின் ஆர்ப்பாட்டத்தைக் கேட்டேன். நடுநிசி. அதனால் அவைகளுடைய உருமல், இரு புலிகள் கூடிக் கர்ஜிப்பதை, இரு சிங்கங்கள் கட்டிப் புரள்வதை, இரு மலைப் பாம்புகள் சீறுவதை, பதினாயிரம் குழந்தைகள் சேர்ந்து அழுவதைப் போன்ற பிரமை தந்தது. ஜன்னல் வழியாகப் பார்த்தால், நல்ல நிலா. தோட்டத்துச் சுவரில் இரண்டு கத்துகின்றன. புரிந்துவிட்டது. வமிச விருத்திக்கான ஊடல். பூனைகளுக்கும் நமக்கும் ஒரு வித்தியாசம். நாம் ஊடல் சமயத்தில் காதும் காதும் வைத்த மாதிரி இருந்து விடுகிறோம். பின்னர்ப் பூனைகள் போல சண்டையிடுகிறோம். பூனைகளோ நாம் இரவில் இருப்பதைப் போல அப்பாவிகளாகப் பகலில் வாழ்கின்றன. இன எழுச்சி இல்லாத போது சாதுவாக இருக்கும்



புரிந்துவிட்டது....ஊடல்

பூனை, ஏன் புலிபோலச் சீற வேண்டும்? காதல் என்பது கடினமான போதை என்பதைப் பூனைகளின் வாழ்க்கை தெரிவிக்கிறது. சில நாவலாசிரியர்கள் கல்யாணத்தோடு இன்பத்தை வாசகர்கள் கற்பனைக்கு விட்டுச் 'சுபம்' என்றோ 'முற்றிற்று' என்றோ போடுகிறார்கள். இது எவ்வளவு தவறு என்பதை நமது வாழ்விலும் பூனைகள் வாழ்விலும் பார்க்கவேண்டும். நல்ல நாவல்கள் — கலியாணத்திற்கு அப்பால் நடக்கும் போராட்டங்களையோ, மனத் தத்துவங்களையோ, வர்ணிக்கும். அதுவே சிறந்த நாவலாகவும் இருக்கக் கூடும்.

நிலவில் பூனையைப் பார்த்தேனே இந்த ஆண் பூனை இதற்கு முன் வேறு ஒரு காதலியுடன் இருக்கப் பார்த்திருக்கின்றேன். நான் சொல்லப்போவதை சட்ட விரோதமாகவோ பெண் இனத் துரோகமாகவோ எண்ண வேண்டாம். பூனைகள் வாழ்க்கையைக் கவனித்த வரையில், ஒரு காதலி சூலுற்றுப் பேறு காலத்திரகு இருக்கும்போது, இது அந்த எண்ணங்களை மறந்து இன்னொரு ஜீவனோடு சல்லாபம் செய்கிறது. இதிலிருந்து ஆண் இனத்திற்கு இந்த நன்றியற்ற தன்மை வெகு சகஜம் என்பதும், புதிய புதிய இடங்களில் போராட்டம் வைத்துக்கொள்ள விரும்பும் சுபாவம் உண்டு என்பதும் இன்றைக்கும் நம் கண்முன் காணும் உண்மை.

பொழுது விடிந்தது. பக்கத்து வீட்டில் போர் ஆரம்பமாயிற்று. போர் புரிந்த பூனைகள் ஒன்றையொன்று அன்புடன் அணைத்துக் கொண்டு படுத்துக் கிடக்கின்றன. வாழ்க்கை மனிதர்களைவிடப் பிராணிகளுக்கு மிக இன்பமாக இருக்கிறதை மனிதன் தான் உணரமுடியும். அவைகளுக்கு அந்த உணர்ச்சி இராது என்றே நினைக்கிறேன்.

* * *

மனிதனுக்கு உள்ள அருமையான பொருள் மனம்.

* * *

கரும்பை வேம்பாகவும், வேம்பைக் கரும்பாகவும் தெரியவைப்பது மனத்தின் இயல்புதான். பிறர் குற்றங்களைக் கூடக் குணமாகக் காட்டுவதும் இந்த மனம் தான். பிறர் குணங்களையும் குற்றமாக எண்ணுகிற போதுதான் மனத்தின் விந்தையை நாம் மறந்துவிடுகிறோம். நண்பர்களை விரோதிகளாக நினைக்கச் செய்வதும் மனம். பயிற்சி பெறாத மனம் எப்போதும் துன்பம் தரும். மனம் பேதலித்தால் மதில் இடிந்த அரண்மனை போன்று அழிந்து விடும். மனத்தை அடக்கவும் ஆளவும் கற்றுக்கொண்டால் நமக்கு நாமே ராஜா. அல்லாது போனால்

எப்போதும் தொழிலாளி—முதலாளி தகராறு நடந்து கொண்டே இருக்கும். நிச்சயமாகத் தொழிலாளர்களை ஆதரிப்பவர்கள் கூட மனத்தைப் பொறுத்த வரையில் முதலாளியாக நடந்து கொள்ளா விட்டால் பெருத்த நஷ்டம். மனத்திற்கு நாம் எஜமானனாக இருக்க வேண்டும். இல்லாதுபோனால் அது நம்மை வீழ்த்திவிடும்.

* * *

மனத்திற்குத்தாழ்ந்தவன் எல்லா வகையிலும் தாழ்மை அடைவான். மனதை வென்றவன் எல்லோருக்கும் மேலானவன்.

* * *

என்ன தான் மாற்று உணவு பற்றிப் பிரசாரம் செய்தாலும் நம்மில் பலரும் அரிசியை மறக்க முடியாமல் அவதிப்படுகிறோம். ஒரு சிலர் நீரிழிவு வந்தவர்கள் மட்டும் கோதுமையை உணவாகக் கொள்ள வேண்டியது வந்து விட்டது. அரிசிக்கு அரசனாக இருக்கக்கூடிய எனது தஞ்சாவூர் வாசியான நண்பர்—அவருடைய வீட்டில் நாங்கள் உணவை மலைமலையாக எதிர்பார்த்தோம். வந்து நின்றது கோதுமை உப்புமா. என்னடா என்றால் பெரிய மனிதர்கள் என்றால் கோதுமை உண்பவர்கள் என்று எண்ணி விட்டார்கள்! கோதுமையை விட நல்ல மாற்றுணவு மீன்.

* * *

ஒரு பொருளின் முந்திய சிறப்பு அது கெட்டுப்போன பின்னே தெரிய முடியும், எழுத்தாளர்கள் இறந்த பின்பு புகழ் அடைவதுபோல.

* * *

கால்செருப்பு... மறையலாம்

மீனின் பெருமையை சொல்லி முடியாது. சிறந்த பதார்த்தங்கள் கெட்டுப் போனால் அவைகள் கொடுக்கிற நாற்றம் சொல்லுக்கு அடங்காது. கருவாடு ஒன்றே இதற்குச் சாட்சி. ருசியில் தலை சிறந்த வாதுமைப் பருப்பு, முந்திரி எல்லாம் கெட்டுப்போனால் கசப்பின் எல்லையான வேம்பு தோல்வியடையும். அதிகமான ருசி உள்ளவை கெட்டுப் போனால் அதிகமான வெறுப்பு. நல்ல மனிதன் கெட்டுப் போனால் அவனைப் பற்றித் தான் அதிகமான தூற்றல் நடைபெறுகிறது. கெட்டவனைப் பற்றி உலகம் கவலைப் படுவதில்லை; பச்சாதாபப்படுகிறது. நல்லவனுக்கு இரக்கம் காட்டுவதில்லை; குறைகூறுகிறது. இது ஒன்றுதான் நல்லவனாக இருப்பதினால் இருக்கும் இடைஞ்சல். மீன் பற்றிச் சொல்லவந்தவன் எங்கோ போய் விட்டேனே! மீன் அருமையான உணவு. ருசியான சத்துள்ள உணவு. வாதுமைப் பருப்பு சாப்பிட்டால் உடல் உப்பிக் கொள்ளலாம்; தொந்தி சரியலாம்; கழுத்து மறையலாம்; கால் செருப்பு, கண் பார்வை

யிலிருந்தும் மறையலாம். மீன் சாப்பிட்டால் கண்களில் ஒளி பிறக்கும். இக்காலத்திய இலக்கிய ஆசிரியர்கள் கதாநாயகியின் கண்ணைக் கயலுக்கும் மீனுக்கும் உவமை சொல்லுவார்கள். அத்தோடு சரி. நான் கூட அந்தத் திருக்கூட்டந்தான். ஆனால் மீனின் இனங்கள் எவ்வளவு என்று அறிந்தபோது தான் திகைத்துப் போனேன். பார்வைக்குச் சிறிது பெரிது என்ற பேதம் தவிர, எதுவுமே எனக்குத் தெரியாது. ஆடுகளை மேய்ப்பவர்கள் எப்படித்தான் ஒவ்வொரு ஆட்டையும் வித்தியாசம் கண்டு கொள்ளுகிறார்களோ? மங்கோலியர்கள், அமெரிக்கர்கள் இவர்கள் எல்லோரும் நமது கண்ணுக்கு ஒரு அச்சாகத்தானே தோற்றம் தருகின்றனர். மீன் வகை தெரிந்தவர்களுக்கு இத்தனை விதங்கள் இருப்பதும் தெரியும்.

* * *

ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு. பழம் பாடல். கடல் மீன் வருமளவும் மீன்கடைக் கொக்கு காத்திருக்குமாம். இந்நாள் வசனம்.

நமது புத்தகம்....என்றுசொல்லுங்கள்

* * *

சுறவு, மசறி, கொளுவை, உளுவை, சூடை, திருக்கை, விரிசிறா, சூரை, மயிலை, அயிரை, மணலி, பாரை, மகரம், முள்ளிறால், குறவை, முறல் வெங்கணை கருங்கணி, குறளி செங்கனி, திமிங்கலம், கோளை, சாளை, தேளி, மூளி, பஞ்சலை, பறவை கெளிறு, மலங்கு, (விலாங்கு என்பது கொச்சைத் தமிழ்) கலகாய், காரை, ஆரல், வாளை (ஆற்று வாளை குளத்து வாளை ஒவ்வொன்றுக்கும் தனித் தனியான ருசி)-மீன் இன்னின்ன இனம் தின்றால் இன்னின்ன பலன் என்று கூட என் நண்பர்கள் சொல்லுவார்கள். நாஞ்சில் நாட்டுப்பக்கத்தில் சூலிக்காரிக்கு என்று ஒரு வகை மீன் இருக்கிறதாம். அது உடல் வலுவும் தந்து குழந்தைக்கு போஷாக்கும் தருகிறதாம். பட்டணங்களில் இருப்பவர்களுக்குப் பாட்டில் மீன் தான் (எண்ணெய் உருவில்) உணவு. இத்தனை மீன் வகையிருந்தும் ஆங்கிலம் தெரிந்த ஒருவர் "பாருங்கள் சார், ஒரு ஐரிஷ் கதையில் மீன் வகைகளை வர்ணிக்கிறான், அப்படி வகை இங்கே உண்டா?" என்று அழுவார். நம்முடைய மொழியில் இருப்பதை நமக்குத் தெரிவிப்பதில்லை; தெரிய ஆவல் கொள்ளுவதுமில்லை. ஒன்றுமில்லை. இன்றைய அரசியலே, அரிசியில்தானே. இதில் எத்தனை வகையான நெல் இருக்கிறது

என்று எனக்குத் தெரியாது. விபரம் கேட்டால் நூற்றுக்கு மேற்பட்ட ரகங்களை நாம் ஆறு அவுன்சாக உண்டு வருகிறோமாம்.

* * *

வரி மயமாக இருக்கும் இந் நாளில், இன்னும் காற்றுக்கு ஏன் வரி இல்லை?

* * *

காற்றடிப்பதால் மரம் அசைகிறது என்றும், மரம் அசைவதால் காற்றடிக்கிறது என்றும் காரணகாரியங்களை யோசிக்காமல் பேசிவிடுவோம். காற்றுத்தான் மரத்தை அசைக்கிறது என்பதை அறிய விஞ்ஞானம் படிக்க வேண்டியதில்லை. ஆனால் மரத்தில் காற்று படுகிற போது ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ஓசை எழும்புகிறது. அரச மரத்தில் பட்டால் கலகலவென்ற ஓசை. வேப்பமரத்தில் பட்டால் ஓசை இருக்காது. 'சர் சர்' என்ற அலை மோதும் சப்தம் இருக்கும். புளிய மரத்தில் காற்றுப்படும்போது சுருள் சுருளான கிளைகளைப்பார்க்கலாம். பயிர்மீது படர்ந்து செல்லும் போது பச்சைக் கடலில் அலை மோதுவதைப் பார்ப்போம். பச்சைப் பயிர் தன்மை வேறு. விளை கதிர்மீது பட்டுச்செல்லும் ஓசை இருக்கிறதே அது நாதக்கட்டுடையது. தென்னையின் காற்றுக்குத்தான் எத்தனை இனிமை. காய்ந்த பனையோலையில் காற்றுத்தழுவி வரும் போது இரவில் கதிகலங்கிப் போவோம்; அத்தனை பயங்கரம்! துவாரமுள்ள வெற்று மூங்கில் குழாயில் காற்றுப் புகுந்துவந்ததைக் கவனித்தவன்தான் புல்லாங்குழல் கண்டு பிடித்தவன். ஆதியில் புல்லாங்குழலுக்குள் புகுந்து வந்த காற்று இனிமையாக இருந்தது. அதன் பின்பு வாத்தியக் கருவிகளுக்குள் ஒரு இடம் கொடுத்தார்கள். இன்று ஒரு விநாடியில் ரேடியோ-அலைகள் பல்லாயிரக்கணக்கான மைல்கள் கடக்கின்றன. காற்றின் சக்தியை வைத்துத்தான் ரேடியோ அலைகள் இடம் விட்டு இடம் போகின்றன. இதே காற்றில் வாசனை நிறைந்த பூக்கள் மலர்ந்தால் அப்போது காற்றின் நளினம் வேறு. அப்பப்பா! காற்றோடு கலக்கும் பொருள்களும் வாசனைகளும், என்னென்ன மானசீக மாயாலோக எண்ணங்களைத் தருகின்றன!

* * *

பூக்கள்! இவை நிலமடந்தையின் நட்சத்திரங்கள். ஒளியொடு வாசனையுள்ள தரை மீன்கள்.

* * *

என்னுடைய நண்பர் ஒருவர் எப்போதும் "எனது புத்தகம், எனது நாவல், எனது சிறுகதை" என்று 'எனது தனது' என்ற சொற்களில் அழுத்தம் கொடுப்பார். தாம் ஒரு நாவலாசிரியன் என்பதை எப்படியாவது சொல்லிக்காட்டுவதில் அவர் சளைப்படைவதில்லை. இவருக்குச் சூடு



'ஸார், மணிக்கூண்டிலே மணி என்னான்னு பாருங்க.''

''மணிக்கூண்டு எங்கே இருக்கு!''

போட நினைத்த இன்னொருவர்—நிறைய ஆங்கிலம் படித்தவர்—தனது புத்தகம் என்பதை இனிச் சொல்ல வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார்.

"ஏன்? எனது புத்தகமே!" என்றார் ஆசிரியர் நெஞ்சை நிமிர்த்தி.

"நமது புத்தகம் என்றே சொல்லுங்கள்."

"உங்கள் புத்தகம் எப்படியாகும்?"

"நமது என்றால் அதிலே உள்ள சரக்குகள் பலருக்கும் சொந்தம். உங்கள் சரக்கு என்பது மிக மிக அற்பம்!" என்று சூடு கொடுத்து விட்டார். எனது புத்தகம் என்றவர் தமது புத்தகம் பொதுவுடமைச் சொத்தென்பதைக் கண்டு கொண்டது பற்றிக் கோபங் கொண்டார்.

* * *

உங்களைப் பற்றி நல்லதனமாக நண்பர்கள் நினைக்கவேண்டுமானால், யாரிடமும் பேசாதீர்கள். பேசினாலும் அபிப்பிராயபேதம் வைப்பதை மனதிற்குள் வைத்துக்கொள்ளுங்கள்.

* * *

சாதாரண மக்களுக்குப் பாகுபாடே தெரியாது. சாதாரண மக்கள் குப்பை மேட்டையும் கோபுரத்தையும் அதிகமான வித்தியாசத்தோடு பார்க்க மாட்டார்கள். வித்தியாசம் புரியவும் செய்யாது. குப்பைக்கும் கோபுரத்திற்கும், கரிக்கும் வைரத்திற்கும், பாதாம்கிருக்கும் வாதுமைப் பருப்புக்கும் வித்தியாசம் தெரியாமல் இருப்பவர்கள் இருக்கிறவரை, இதைத் தெரிந்தவர்கள் மேதாவிகளாகவே காட்சி தருவார்கள். இவர்கள் தயவை வைத்துத்தான் பத்திரிகை, விஞ்ஞானம், அரசியல், வியாபார மோசடி எல்லாம் நடைபெறுகின்றன. உலக இயக்கமே இவர்களுக்காகத்தான்.

இதில் ஒரு வேடிக்கை. நம்மில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு—ஏன் பல துறைகளைப் பொறுத்தவரை சாதாரண மக்களாகவே இருக்கிறோம். அதனால் தான் ஒருவருக்காக ஒருவர் வாழவும் வாழ்த்தவும் முடிகிறது.

புயலுக்குப் பின்...!

'தில்லைவாசி'

அந்த இரு பெண்களும் கடை வீதிகளிலோ அல்லது மற்ற தெருக்களிலோ சேர்ந்துதான் காணப்பட்டனர். அவர்கள் இருவரும் உடன்பிறந்த சகோதரிகள்; பிச்சைக்காரிகள். கருணை மிகுந்த மக்களை நம்பித்தான் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள்; ஏன், வாழவேண்டியவர்களும் கூட!

சின்னஞ்சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்துவிட்ட அவர்கள் அனாதைகளாயினர்; ஆதரவற்றுப்போனார்கள். ஒட்டிவிட்ட பாசமும் பிணைப்பும் இருவரையும் இணைத்துவைத்தன. ஒருவரை ஒருவர் கணமும் பிரிய மாட்டார்கள்.

மூத்தவள் ராசாம்பாள். அவளுக்கு வயது பதினெட்டு. இளையவள் ரங்கம்மாள். இவளுக்கு மூன்றுவயசு குறைச்சல். ராசாம்பாள் உடல்வனப்பு மிகுந்தவள். சிவந்த மேனியும் மருண்ட விழிகளும் அவள் அழகை அதிகப்படுத்தின. ரங்கம்மா, அவள் அக்காவைப்போல அழகுடையவள் அல்ல. முகத்தில் அம்மை வடுக்கள் ஏற்பட்டு, அவள் அழகு குறைந்திருந்தது. அத்துடன் அவளுக்கு ஒரு கால் நொண்டி.

அவர்கள் இருவரும் தங்களுக்குத் தெரிந்த பாட்டுக்களைப் பாடி, மக்களிடம் காசு பெற்றனர். வீட்டுக்கு வீடு நின்று பாடினால் கொஞ்சம் அரிசியும் அவர்களுக்குக் கிடைக்கும். எப்படியும் அவர்களுக்குப் போதிய அளவு காசும் அரிசியும் கிடைத்துக்கொண்டிருந்தன.

ராசாம்பாளின் அழகை உத்தேசித்து எவனும் அவளைக் கல்யாணம் செய்துகொண்டு விடுவான். ஆனால் அவளோ தன் நொண்டித் தங்கையை உத்தேசித்து, எதிலும் மனதைச் செலுத்தாமலிருந்தாள். தங்கை மீது தன் அன்பு முழுவதையும் செலுத்தினாள். நிராதரவான நிலையிலிருந்த ரங்கம்மாளும் தன் அக்காவே கதியென்று, அவளிடம் தன் உயிரையே வைத்திருந்தாள். அவ்வளவு அன்புடன் அவர்கள் இருந்தார்கள்.

★

அன்று சிதம்பரத்தில் திருவிழா. ஜனக்கூட்டம் மிஞ்சியிருந்தது. நொண்டி, முடம், கூன், குருடு—இப்படிப் பல தரப்பட்ட பிச்சைக்காரர்கள் வந்திருந்தார்கள். அவர்களுள் சகோதரிகள் இருவரும் கூட இருந்தனர். கடைத்தெரு, தேரடி மற்றுமுள்ள இடமெல்லாம் அவர்கள் பாடினார்கள்.

காலணுக் காசுகளாக நிறைய அவர்களுக்குக் கிடைத்தன.

அவர்களுக்கு நேர் எதிராக ஒரு கும்பல். அங்கு பாடிக் கொண்டிருந்தான் ஒரு பிச்சைக் காரன். சிறு வயது. தலை மயிர் பின்னல் அலங்காரமாக வாரி விடப்படிருந்தது. அவன் நெற்றியில் கருஞ்சாந்துப் பொட்டு இட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கும் நிரம்பக் காசுகள் கிடைத்தன.

சகோதரிகள் அவனைப் பலமுறை பல இடங்களில் பார்த்திருக்கிறார்கள். அவனும் இவர்களை நன்ருகப் பார்த்திருக்கவேண்டும். சொல்லிவைத்தாற்போல அவன் அந்தச் சகோதரிகள் கூட்டம் போட்ட இடத்துக்கு எதிரே தானும் கூட்டம் கூட்டிக்கொண்டிருந்தான்.

ரங்கம்மாளுக்கு அவன் அப்படிச் செய்தது பொருமையாக இருந்தது. 'இவன் ஒருவன் எங்கிருந்து நமக்குப் போட்டியாக வந்து தொலைந்தான்?' என்று அவளுக்கு ஆத்திரம் பொங்கிற்று.

'அவனும் நம்மைப்போல ஒரு அனுதைப் பிச்சைக்காரன் போலிருக்கு. ஆனல் ஆள் நல்ல அழகாக, கம்பீரமாயிருக்கிருன்' என்றுதான் ராசாம்பாள் நினைத்தாள். 'தங்களுக்குக் காசுகள் அதிகம் கிடைக்காவிட்டாலும், அவனுக்காகிலும் கிடைக்கட்டுமே' என்று. ... அவள் எண்ணிஞள். அவ

னுக்கு மனைவி என்று ஒருத்தி இருக்கிறாளோ இல்லையோ என்று ஒரு சந்தேகம்கூட அவள் மனதில் அப்பொழுது எழுந்தது. ஏனோ தெரியவில்லை, அவனைப் பார்த்ததுமுதல், அவளுக்கு அவனிடம் ஒருவித அன்பும் அனுதாபமும் ஏற்பட்டன.

இராப்பொழுதைக் கழிக்க அவ்விரு சகோதரிகளும், ஊருக்கப்பால் குளத்துமேட்டிலிருந்த மண்டபத்தில் வந்து தங்கினார்கள். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் அந்தப் பிச்சைக்கார இளைஞனும் அங்குவந்து சேர்ந்தான்.

ராசாம்பாள் சந்தேகப்பட்டபடி அவனுக்கு மனைவி என்று யாரும் அங்கில்லை. அவன் வேறு ஒரு பக்கம் அடுப்புப் பற்றவைத்துச் சமைக்கத் தொடங்கினான். அவனை அந்நிலையில் கண்ட ராசாம்பாளுக்கு மேலும் அவனிடம் அதிக அனுதாபம் உண்டாகியது. அவனுக்காக அவள் பரிதாபப்பட்டாள்.

"நீங்க ரெண்டுபேரும் நன்றாகப் பாடினீங்களே! எங்கே இதெல்லாம் கற்றுக்கிட்டீங்க?" என்று அவன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

அவன் பேச்சைக்கேட்டதும் ராசாம்பாளுக்கு மகிழ்ச்சி நிலைகொள்ளவில்லை.

"நீங்களும்தான் ரொம்ப நல்லாப் பாடினீங்க...ஏன்,நீங்களே சமைக்கிறீங்க? உங்க பெண்சாதி எங்கே?..."

"நாடோடிக்கு அது ஒன்றுதான் குறைச்சலா?" என்று அவன் அலுத்துக்கொண்டான்.

"நாங்கதான் சமைக்கிறோமே உங்களுக்கும் சேர்த்துச் சமைத்துவிடுகிறோம்" என்றாள் மூத்தவள் அவனைப் பார்த்து. அவன் சம்மதித்தான்.

ரங்கம்மாளுக்குத்தன் அக்காள் அவ்வாறு சொன்னது பிடிக்கவில்லை. அவனிடத்தில் அவளுக்கு ஏனோ ஓர் இனம் தெரியாத வெறுப்பு ஆரம்பத்திலிருந்தே ஏற்பட்டிருந்தது. இருந்தும் அவள் தன் மனப்போக்கை ஒன்றும் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை.

சாப்பாடு முடிந்ததும், இரவு ராசாம்பாளும் கந்தனும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"ரங்கம்மாள் இங்கேயே மண்டபத்தில் இருக்கட்டும். நாமிருவரும் கடைத்தெருவிற்குப் போய்ப் பாடலாம். கிடைக்கும் வருமானத்தை மூன்று பங்காகப்பிரித்துக்கொள்வோம்" என்றான் அவன். ராசாம்பாளுக்கு அந்த யோசனை 'சரி' என்று பட்டது. அவள் சம்மதித்தாள். ரங்கம்மாளுக்கு அதில் மனமில்லை. என்றாலும் அவள் வெளிக் காட்டவில்லை.

கந்தனும் ராசாம்பாளும் தினமும் கடைத் தெருக்களுக்குச் சென்று பாடினார்கள். நிறையக் காசு கிடைத்தது. அன்று முதல் ரங்கம்மாளை எங்காவது ஒரு இடத்தில் விட்டுவிட்டு, அவ்விருவரும் வெளியில் போய்ப் பாடி வருவதாகவே இருந்தார்கள். அவர்கள் ஊர் மாறி ஊர் போய்க் கொண்டிருந்தார்கள்.

கந்தனும் அவர்களைப் பின் தொடர்ந்து கொண்டேயிருந்தான்.

ஒருநாள் கந்தன், ராசாம்பாளைக் கல்யாணம் செய்து கொண்டான். அதிலிருந்து ரங்கம்மாளின் கவலை அதிகமாயிற்று. 'எந்த நிமிஷமும் அவர்களிருவரும் தன்னை விட்டுப் பிரிந்துபோய் வடுவார்கள்' என்று அவள் நினைத்ததற்குச் சரியாக, ஒரு நாள் நடு நிசியில் அவர்கள் எங்கோ சென்றுவிட்டார்கள்.

எங்கிருந்தோ புல்லுருவி போல ஒருநாள் கந்தன் அவ்விரண்டு சகோதரிகளின் வாழ்க்கையில் குறுக்கிட்டான்; சின்னஞ் சிறு வயது முதலே இணை பிரியாதிருந்த அவர்களையும் பிரித்துவிட்டான்; தங்கையின் நலன் ஒன்றையே கருதி, தன் கல்யாணத்தைப் பற்றியும் கருதாமல் இருந்துவந்த ராசாம்பாளின் மனதைக் கலைத்து, நொண்டித் தங்கையிடமிருந்து அவளையும் பிரித்து அழைத்துக் கொண்டுபோய்விட்டான்அவன்.

தன் வாழ்வில் ஏற்பட்ட இந்தத் திருப்பத்தை—மாற்றத்தைக் கண்டு ரங்கம்மாள் மனம் வருந்தினாள். அக்காவை விட்டு அவர் பிரிந்துவிடாமல் இருக்க வேண்டும் என்பது ஒன்றே அவள் கவலையாகவும் இருந்தது.

ரங்கம்மாளால் மக்களின் மனதைக் கவரும் முறையில் பாட முடியும். உந்தி, உந்தி இங்குமங்கும் நடமாடியவாறு பாடுவாள். பணம் கிடைக்கும். நாட்கள் ஓடின.

ரங்கம்மாள் தன் அக்காளைப் பற்றி எண்ணாத நாளே இல்லை. அதேமாதிரி ராசாம்பாளும் தன் தங்கச்சியைப்பற்றி நினைத்தாளோ, என்னவோ? இரண்டு ஆண்டுகள் கழிந்து போயின.

அவள் சுற்றிய எவ்வூரிலும் ராசாம்பாளைச் சந்திக்கவே முடியவில்லை. 'அக்காவை எங்காகிலும் ஒருதரம் கண்ணால் பார்த்துவிடவேண்டும்' என்று அவள் மனதில் எழுந்த ஆவல் வரவர அதிகரித்து வந்தது. 'அக்கா நல்லபடியாயிருந்து வருகிறாள்' என்ற நல்ல சேதி தன் காதில் விழாதா என்று அவள் ஏங்கினாள்.

★

அது சித்திரை மாதம். மதுரையில் திருவிழா அழகாக இருக்குமென்று ரங்கம்மாள் கேள்விப்பட்டிருந்தாள். 'அங்கு போனால் தனக்கு ஏதாவது காசு கிடைக்கும்; ஒருவேளை அக்காளையும் சந்திக்க நேரிட்டாலும் நேரிடும், என்று அவள் எண்ணிப் புறப்பட்டாள்.

ஊரெல்லாம் சுற்றிவிட்டுப் பொழுது சாயும்நேரத்தில் களைப்பாற ஓரிடத்தில் வந்தமர்ந்த ரங்கம்மாள், அவ்விடத்தில் கைக்குழந்தையுடன் உட்கார்ந்திருந்த பெண்ணை ஊடுருவிப் பார்க்கலானாள்.

கணத்தில் அவள் தன்னையும் மறந்துவிட்டாள்.

"அக்கா நீயா?"

"தங்கச்சி"

அக்காளும் தங்கையும் அன்புடன் தழுவிக்கொண்டார்கள். ராசாம்பாளின் உருத்தோற்றமே மாறிவிட்டிருந்தது. அம்மை வடுக்கள் அவள் முகத்தைவிகாரமாக்கி அழகைக் குலைத்திருந்தன. அக்காளை அந்நிலையில் கண்ட ரங்கம்மாளுக்குப் பீறிட்டுக்கொண்டு வரும் அழுகையை அடக்க முடியவில்லை.

"அக்கா, நீ மட்டும் தனியே உட்கார்ந்திருக்கிறாயே. அத்தான் எங்கே?"

"அந்தப் பாவிமகன் என்னை விட்டுவிட்டு எங்கேயோ ஓடிவிட்டான். அவனை நல்லவன் என்று எண்ணி ஏமாந்துபோனேன். என்னைப் பெரிசு பண்ணி மன்னிச்சுக்க, நான் உன்னை விட்டுப் பிரிஞ்சுபோனதுக்கு. உன்னிடம் சொல்லிக்கிட்டுப் போகாததுக்கு நான் நல்ல தண்டனை அடைஞ்சிட்டேன். உன்னைமாத்திரம் இப்போது நான் காணாவிட்டால், எங்காகிலும் குளம் குட்டையில் விழுந்து செத்திருப்பேன். ரங்கம்மா, இனி நீதான் எனக்கும் பிள்ளைக்கும் ஆதரவு."

"அக்கா, உன்னைப் பார்க்க வேணுமின்னு எப்படித் துடிச்சுப் போனேன் தெரியுமா? நீ எனக்குக் கிடைத்தாயே, அதுவே போதும்" என்று ஆனந்தப்பரவசம் பொங்கக் கூறியவாறு, அவள் குழந்தையை வாங்கி முத்தமிட்டாள். அப்பொழுது அவ்விரு சகோதரிகளின் உள்ளங்களிலும் புயலுக்குப் பின் நிலவும் அமைதி படர்ந்தது!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

விற்பனையாகிறது !

வாசித்துப் பாருங்கள் !!

தமிழ்நாட்டில் பிரபல நாவலாசிரியர் எழுதிய திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த துப்பறியும் நவீனம் !

சூழ்ச்சியே ஒருருக்கொண்ட சுயநலவாதி ஒருவன் — சூழ்ச்சி வலையில் சிக்கிச் சீரழியும் சிங்காரி ஒருத்தி — அவளைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும் சோதாக் கூட்டம் ஒன்று — அச்சோதாக் கூட்டத்திற்கும், சூழ்ச்சிக்காரனுக்கும் சதா தொல்லை தந்துகொண்டிருக்கும் மாயாவி ஒருவன் — இவர்கள் எல்லோரையும் ஓய்வு ஒழிச்சலில்லாது அலையவைத்துக்கொண்டிருக்கும் மர்மக் கடிதம் ஒன்று — அந்த மர்மக் கடிதத்தின் உண்மையை அறிய வேண்டுமானால்?

மருதூர்

A. பிரபாபர சாஸ்திரியார் B. A.

அவர்கள் எழுதிய

சுந்தரவதனி

என்னும் துப்பறியும் நாவலை வாங்கி வாசித்துப் பாருங்கள் !

பிரபல ஓவியர் எழுதிய மிக அழகிய இருவர்ண முகப்புப் படத்துடன்

விலை ரூ. 1—8—0

ரூபாய் 1–8–0 M. O. செய்கிறவர்களுக்குஎவ்வித செலவுமின்றி அனுப்பப்படும்

ஏஜண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு

குறிப்பு:— ஹிக்கின்பாதம், சுதேசமித்திரன், வைகறை வெளியீடு ஏஜண்டுகளிடத்திலும் கிடைக்கும்.

★

— கிடைக்குமிடம் —

வைகறை · வெளியீடு

திருப்பாதிரிப்புலியூர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தொடர் கதை

ராஜா ராணி

தங்கமணி

8. ராணியின் சபதம்!

வாளை ஓங்கிக்கொண்டே பாய்ந்தோடி வந்தான் அதிகார மமதை கொண்ட ராஜசிம்மன். ராணி ஆடாமல் அசையாமல் கம்பீரமாய் நின்றாள்.

“சிங்கக் குட்டியிடமிருந்து உன் உயிரைக் காப்பாற்றிய என்னிடமா சீறிப் பேசுகிறாய்? நன்றி கெட்ட நச்சுப் பாம்பே!” என்று குமுறிக் கொண்டே ராஜசிம்மன் வாளை ஓங்கினான்.

“ஏ, ராஜசிம்மன் நில்”—ராணி கத்தினாள்! பாய்ந்து வந்த ராஜசிம்மன் பதுமையாய் நின்றான். அவன் பசலைக் கண்களில் ஆத்திரம் பளபளத்தது. அவன் ராணியைப் பார்த்து “ஏன்?” என்று கத்தினான்.

“சிரசைவெட்டு வதற்குள் ஒரு சிறு வார்த்தை”

“என்ன?”

“என் சிரசை வெட்டிவிடு. ஆனால் உன் சிரசைக் காப்பாற்றிக் கொள்!”

“......புரியவில்லை!”

“ஆம். புரியாது தான்! காமாலைக் கண்களுக்கு எந்தக் காட்சியும் தெரியாது தான். அதிகார வெறிபிடித்த அற்பனுக்கு அதெல்லாம் விளங்காதுதான்”

“ஏ விஷப் பூச்சியே, என்ன உளறுகிறாய்?”

“உளறவில்லை. மந்திரி நாகநாதனின் நச்சுப் போதனையால் நாட்டு மக்களை நாசப்படுத்தும் உன்னை நல்வழியில் திருப்ப எண்ணுகிறேன்!”

“ஏ, புல்லுருவி! புரட்சிக் கவிதையா பாடுகிறாய்?”

“அவள் நாடு கடத்தப்பட்ட ஒரு நாடோடிக் கவியின் மகள் தானே!” என்று சொல்லிக் கொண்டே மாடியிலிருந்து கையிலிருந்த சாட்டையைச் சுழற்றிக் கொண்டு இறங்கிவந்தான் மந்திரி நாகநாதன். ராணி எட்டி நின்று நாகநாதனைப் பார்த்து முறைத்தாள்.

"ராணி, எண்ணிய கணமே உன்னை எமபுரிக்கு அனுப்பி விட என்னால் முடியும்; மனம் வரவில்லை. எச்சரிக்கிறேன்! எனக்குச் சகோதரியாய் வந்து எனக்கே சவக்குழி வெட்டுகிறாய்!"— ராஜசிம்மன் ஆத்திரம் அடங்கிப் பேசினான். நாகநாதன் கேலியாகச் சிரித்தான்; சிரித்துவிட்டுச் சொன்னான்:

"பவளபுரி இளவரசே, நீங்கள் பாம்புடன் விளையாடுகிறீர்கள். முடியரசை வெறுக்கும் ஒரு முட்டாள் கவிஞனின் மகள் இவள் இவள் தந்தை ஒரு விஷப்பூச்சி. இவள் அந்த விஷப்பூச்சியின் குட்டி. இவளை இப்போதே விரட்டியடியுங்கள்."

"விரட்டவேண்டாம்; வெளியேறுகிறேன், ராஜசிம்மா! நாட்டு மக்களின் ரத்தக் கடலில் முக்குளித்து ரத்தவெறிபிடித்த பகல் கொசுவே, இதோ வெளியேறுகிறேன்! உன்னைத் திருத்தி விடலாம் என்று நம்பி உனக்குத் தங்கையாக வந்தேன்; முடிய வில்லை. இப்போது வெளியேறுகிறேன், உன் வெறியை ஒழிக்கும் சுதந்திரத் தங்கையாக!"

"நன்றிகெட்ட நாயே, ஓடு வெளியே!"...ராஜசிம்மன், நாக நாதனிடமிருந்த சாட்டையை வாங்கி, ராணியை இரக்கமற்றுச் சாடி னான். ராணி உயிர் வதைபட எழுந்து நின்றாள். அவள் உடலெங் கும் பட்ட சட்டையடியிலிருந்து ரத்தமாய் வழிந்தது! அவள் பெருமூச்சுவிட்டுக் குமுறினாள்.

"ராஜசிம்மா, என் உயிரைக் காத்த சகோதரா, உன் அதிகார வெறி அதிசீக்கிரத்தில் அழிந்துவிடும் பார்!" என்று உணர்ச்சிக் கொதிப்புடன் சபதம் செய்துவிட்டு அங்கிருந்து வெளியேறினாள் ராணி.

நாட்கள் உருண்டுகொண்டே இருந்தன. சுதந்திரத்தைப் பற்றி முணுமுணுத்தவர்களெல்லாம் துண்டுதுண்டாக வெட்டி வீசி எறியப்பட்டார்கள். கொடுமை கோர தாண்டவமாடியது!

திடீரென்று ஒரு நாள்!

நாட்டு மக்கள் வீறிட்டு எழுந்தார்கள். அரண்மனையை நோக்கி விறுவிறு வென்று கிளம்பினார்கள். விஷயம் அரண் மனைக்குத் தாவியது. அரண்மனையிலிருந்து வீரர்கள் குமுறியெழுந் தார்கள். ராஜசிம்மன், மகமேரு, நாகநாதன் எல்லோரும் குதிரை யின் மீதேறிப் பறந்தார்கள்.

மறு நிமிஷம், நாடெங்கும் அல்லோலகல்லோலமாயிற்று. எங்கும் தீ! ஓலம்! கதறல்! வீதிகளெங்கும் ரத்தக் குளங்கள் தேங்கி நின்றன! எங்கும் பிணக் குவியல்கள்! குழந்தைகள் கிரீச்சிட்டன! தாய்மார்கள் பரதவித்தார்கள்! அராஜகம் கோர தாண்டவம் ஆடியது!

ராஜசிம்மன் வெறிபிடித்து வாளைச் சுழற்றி நாட்டுமக் களை, சுதந்திர வெறியர்களை வெட்டி வீழ்த்தினான்.

திடீரென்று ஒரு கர்ஜனை!

"ஏய், ரத்த வெறி பிடித்த பேயே!" இந்த வீர கர்ஜனையைக் கேட்டு, வாலடித்துத் துள்ளித் திரும்பும் விலாங்கு மீனைப் போல ராஜசிம்மன் துள்ளித் திரும்பிப் பார்த்தான்! அங்கே...

......மாயவனுக்குத் தூக்கம் கண்களை அழுத்தியது. அவன் புத்தகத்தைத் தலைமாட்டில் வைத்துக்கொண்டு அங்கேயே சுருண்டு படுத்துத் தூங்க ஆரம்பித்தான்.

9. மாயவனின் பயம்!

பொழுது விடிந்தது!

எப்பொழுதும் போல மாயவன் ஆடு மேய்க்கக் கிளம்பினன். அவனோடு ராஜாவும் புறப்பட்டான். இருவரும் ஆட்டு மந்தையை விரட்டிக் கொண்டு குறிஞ்சிக் காட்டிற்கு வந்தார்கள். மந்தையை ஒரு பக்கமாக மேய விட்டார்கள். இருவரும் ஆலமரத்தடியில் வந்து உட்கார்ந்தார்கள். பேச்சு மலர ஆரம்பித்தது.

"ராஜா அண்ணச்சி, நீ எப்போதுதான் உன் வீட்டிற்குப் போகப் போகிறாய்?"

"என் அப்பா, அவருடைய கொலைகாரப் புத்தியை விட்டு விடும் போது!"

"சரியாய்ப்போயிற்று போ" என்று மாயவன் அலுத்துக் கொள்வதற்கும் "டேய்!" என்ற அதட்டல் கிளம்புவதற்கும் சரியாக இருந்தது. ராஜாவும், மாயவனும் சட்டென்று திரும்பிப் பார்த்தார்கள். எதிரில் பண்ணைக்காரரின் மகள் சுகந்தி விறைத்துக் கொண்டு நின்றிருந்தாள். சுகந்தியைக் கண்டதும் மாயவனின் மனம் திக்கென்றது. அவன் டக்கென்று எழுந்து மரியாதையுடன் நின்றான். ராஜா அவளையே விழியசையாமல் பார்த்துப் பதுமையாய் அமர்ந்திருந்தான்.

சுகந்தி, ராஜாவைப் பார்த்தாள். அவளுக்கு ஆத்திரம் பிய்த்துக் கொண்டுவந்தது! அவள் மாயவனை முறைத்துப் பார்த்துக்கேட்டாள்.

"டேய் மாயவா, இந்தக் கர்வம் பிடித்த கழுதை யார்?"

சுகந்தியின் பேச்சைக் கேட்ட ராஜாவுக்குச் 'சுர்ரெ'ன்று கோபம் குமுறியது.

"கழுதை என்று யாரைச் சொல்கிறாய், கர்வம் பிடித்த கழுதை! உன் அதிகாரத்தையெல்லாம் அடக்கி வைத்துக்கொள்!" என்றான் ராஜா. அவன் சுகந்தியைப்பற்றி, ரஞ்சிதத்திடம் கேள்விப் பட்டிருந்தான். ஆகவே அவனுக்கு அவளைக் கண்டதும் ஆத்திரம் பொங்கியது.

"உம்! உனக்கு அவ்வளவு துணிச்சலா?" என்று கத்திக் கொண்டே மாயவனிடமிருந்த கழியைப் பிடுங்கி, ராஜாவை அடிக்க ஓங்கினாள். ராஜா அவள் கையைத் தடுத்துப் 'பளீர்' என்று ஓர் அறை வைத்தான். சுகந்தி துடிதுடித்துப் போனாள். மாயவன் பதைபதைத்துப் போனான். அவனுக்கு ஒரே பயமாகப் போய் விட்டது. அவன் பாய்ந்தோடிச் சென்று ராஜாவைப் பிடித்துக் கொண்டான்.

சுகந்தி கழியைப் போட்டுவிட்டுக் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு, "அப்பா, அப்பா!" என்று கத்திக்கொண்டே குதித்துக் குதித்து வீட்டை நோக்கி ஓடினாள்.

"அடப்பாவி, எனக்குத் தீம்பு வைத்தாயே, உன் பொல்லாத கோபத்தைச் சுட்டுப் பொசுக்க" என்று பதறினான் மாயவன்.

"அட சும்மா இரு அண்ணாச்சி, ஒன்றும் பயப்படாதே. கதர்ப் பாவாடை, கதர்க்கவுன் எல்லாம் போட்டுக் கொண்டு கன்னா பின்னா வென்று பேசுகிறாளே, அவள் திமிரை அடக்குகிறேன் பார்!" என்று வீரம் பேசினான் ராஜா.

"அட போடா மூடா! பண்ணைக்காரர் வந்தால்......" மாயவனுக்குச் சொல்லும்போதே உடல் நடுங்கியது. குப்பென்று வியர்த்துக் கொட்டியது.

"டேய் ராஜா, மரியாதையாக இப்போதே எங்கேயாவது ஓடி விடு. நீ பண்ணைக்காரரின் கோபத்திற்கு ஆளானல் உயிர் பிழைக்க மாட்டாய். உம் கிளம்பு, நான் எந்தக் கதியையாவது அடைகிறேன்."

"நீ சும்மா இரு அண்ணச்சி" என்ருன் ராஜா.

"சரி. நீ இங்கேயே இரு. நானாவது எங்கேயாவது ஓடி ஒளிந்து கொள்ளுகிறேன்" என்று அங்கிருந்து திரும்பிப் பார்க்காமல் கூடப் போய்விட்டான் மாயவன்!

"கோழை!" என்று அவனைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் பாறையின்மீது பிடிவாதமாக உட்கார்ந்தான் ராஜா. சிறிது நேரத்திற்குள், பண்ணைக்காரர் சுகந்தியை அழைத்துக்கொண்டு ஓடோடியும் வந்தார். ராஜா அவர்களைக் கண்டதும் துணிச்சலாக எழுந்து விறைப்பாக நின்ருன்.

"அப்பா, இந்தத் தடிப்பயல்தான்!" சுகந்தி தன் அப்பாவுக்கு ராஜாவைக் காட்டினுள்.

"ஏண்டா, என் குழந்தையை அடிக்க உனக்கு எவ்வளவு தைரியம்? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று உறுமிக் கொண்டே ராஜாவின்மீது பாய்ந்தார் பண்ணைக்காரர்!

[அடுத்த இதழில் முடியும்.]

புரட்சிக் கருத்துக்களைத் தூவி விட்டு உணர்ச்சியும் உயிர்ப்பும் கொண்ட நல்லதொரு நாடகமாக 'மிராசுதா'ரை உருவாக்கிய நண்பர் ரங்கசாமியைப் பாராட்டுகிறோம்.

மாக்ஸிம் கார்க்கியின் 'போலெஸ்' தமிழாக்கம் சிறந்த முறையில் அமைந்திருக்கிறது.

போலெஸ்—ஆசிரியர்: மாக்ஸிம் கார்க்கி. தமிழாக்கம்: பி. எக்ஸ். ரங்கசாமி. மிராசுதார், போலெஸ்: இரண்டும் கிடைக்குமிடம்: காலேஜ் புக்ஸ்டால். திருநெல்வேலி. விலைமுறையே ரூ1. அணா2.

நண்பர் புஷ்பத்துறை சுப்பிரமணியம் எழுதிய 'பிறை' சிறுகதைத் தொகுப்பில் கதைகள் ஒவ்வொன்றும் இலக்கியச் சுவையுடன் தீட்டப்பட்டிருக்கின்றன. வளரும் இலக்கியத்தில் 'பிறை'யின் பங்கும் போற்றற்குரியதே.

பிறை—ஆசிரியர்: புஷ்பத்துறை சுப்பிரமணியம். ஸ்டார் பிரசுரம், திருச்சி. விலை ரூ 1–0–0.

'அன்பு மீனள்' 'சுவைமணி'யின் சுவைமிகுந்த மணியான படைப்பு!

அன்பு மீனள். உருவாக்கம்: சுவைமணி. வெளியீடு: வாசுகிப் பதிப்பகம். சிறுவயல், இராமநாதபுர மாவட்டம். விலை அணா4.

சென்னை ரேடியோ நிலையத்தில் ஒலி பரப்பப்பட்ட திருமதி டி. ஏ. மதுரத்தின் 'என் கடன் களிப்பூட்டுதல்' 'புஷ்பங்கள்' என்ற இரு சிறு புத்தகங்களும் கருத்தமைந்தவை; களிப்பூட்டுபவை.

என் கடன் களிப்பூட்டுதல்; புஷ்பங்கள்: ஆசிரியர். டி. ஏ. மதுரம். நன்னூலகம், சென்னை—17. விலை முறையே ரூ 0–2–0, 0–4–0.

ஆசிரியர் 'சேரன்' படைத்த அஞ்சலை, ஆனந்தன், அருளப்பன், சாந்தி, மூர்த்தி இவர்களைப் பற்றிய கதைதான் 'என் மகள்'. நாவல் என்ற அளவிற்குக் கூறுவதற்கில்லை, நீண்டதொரு கதை. கதையில் 'உயிர்' இருக்கிறது.

'இன்ப இரவு' இவரது அடுத்த புத்தகம். சிறுகதைச் சேர்க்கை. இன்ப இரவு, ஏழை அழுத கண்ணீர், சிங்காரி சிரித்தாள், பூங்கொடி ஆகிய நான்கு கதைகள் உள்ளன; காலத்தை ஓட்டப் பிரித்துவைத்துப் படிக்கலாம்.

என் மகள், இன்ப இரவு. ஆசிரியர்: சேரன். வெளியீடு: கலைப்பண்ணை, சூளை, சென்னை-7. விலை முறையே ரூ. 1, அணா 8.

தோழர் தங்கப்பழம் 'பதவி' என்ற பெயரில் ஐந்து சிறுகதைகளைக் கணியமைத்துத்தந்திருக்கிறார். கதைகள் 'பரவாயில்லை' என்ற தீர்ப்பைத்தான் பெறுகின்றன. எனினும் ஆசிரியரது முயற்சி போற்றப்பட வேண்டியதே.

பதவி—ஆசிரியர்: இரா. சு. தங்கப்பழம். வெளியிட்டோர்: செல்வம் பதிப்பகம். மதுரை. விலை ரூ. 0–8–0.

'பூவை'

1st Prize winners of C. No. 62. (1) Venkatramiah, Narsapur. (2) P. Kondiah, Chittoor. (3) B. Panda, Ganjam. (4) B. Singh, New Delhi. (5) M. N. Kannu, Trivandrum. (6) S. P. Singh, Punjab. (7) V. C. Kurian, Lucknow. (8) V. R. Pillai, Shertally. (9) Man Singh, W. Bengal. (10) B. Bakodia, Betul. (11) G. C. Patnaik, Orissa. (12) G.P. Seth, Patna and 7 others. In addition 33 persons are awarded 3rd prize and 11 the 5th Prize.

Full particulars are published in the Rainbow dated 25—11—51

ரிஜிஸ்டர் நெ. 249 ரூ. **25,000** பரிசு போட்டி நெ. 64

M S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றாம் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS
KEY S. NO. 62 -101 TO 116-431

109	106	107	112
104	115	114	101
116	103	102	113
105	110	111	108

We hereby certify that the above is the solution in original deposited with us by *Rainbow Competitions No* 62 on 22-11-51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.
V Ramanathan 12-11-51
Agent, Madras.

முடிவு தேதி ***13-12-51*** விடை ***27-12-51***

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. 1-0-0 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

442

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 103 முதல் 118 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 442 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது ¼ அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

THE RAINBOW COMPETITIONS No. **64**

98 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16, Sent Amman Koil Street, Tondiarpet, Madras - 21.

சிந்தனை விருந்து

இலக்கியச் சந்தையில்	...	மு. அண்ணாமலை ...	0—8—0
மதம் அவசியமா?	...	கட்டுரைகள் ...	0—12—0
வருங்காலத் தமிழகம்	...	அறிஞர் அப்பாத்துரை	0—12—0
சங்க இலக்கிய மாண்பு	...	,, ...	0—6—0
இந்திய மொழிச் சிக்கல் (ஆங்கிலம்)	...	,, ...	2—8—0
தபாலாபீஸ் வினோதங்கள்	...	க. சண்முகசுந்தரம் ...	0—8—0
பெரியாரும் கவிஞரும் அண்ணாவும்		எஸ். சதாசிவம் ...	0—8—0
முதலாளித்துவம் ஒழிக	...	,, ...	0—12—0
கார்ல்மார்க்ஸ்	...	,, ...	0—12—0
ஏழையின் அரசியல்	...	,, ...	0—8—0
அண்ணா யார்?	...	வழிப்போக்கன் ...	0—8—0

ரூபாய் 5-க்குக் குறைந்து வி.பி.பி. அனுப்பப்படமாட்டாது.
முன்பணம் அனுப்புவோருக்கு மட்டுமே தபாற் செலவு இலவசம்.

பொன்னி லிமிடெட் :: சென்னை-21

Regd. N. . M. 4849.

VEEYAR FILMS
DEVAKOTTAI

TELE PHONE
GRAMS "

திரையிடத் தயார்!

பாக்கிய லெக்ஷ்மி

(தெலுங்கு)

சித்தூர் V. நாகையா, சூரியகுமாரி,
N. S. கிருஷ்ணன், T. A. மதுரம்
முதலியோர் நடித்தது

தென்னிந்திய விநியோக உரிமையாளர்கள்:
வியார் பிலிம்ஸ் :: தேவகோட்டை